விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
(C-6649)
உலகெங்குமுள்ள நாடுகள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 31 வெள்ளிக்கிழமை (14.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 177

### கிளி., இராமநாதபுரம் பகுதியில்

## மோட்டார் சைக்கிளுடன் ஜீப் வண்டி மோதி விபத்து

### இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இராமநாதபுரம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ▷24

## பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டை நிமிரச் செய்வோம்

### இஸ்லாமிய நாட்டு தூதுவர்களிடம் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

அண்மைய காலங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழ்நிலை காரணமாக, பயங்கரவாதத்தை குறுகிய காலத்துக்குள் முழுமை ▷24

### பதில் அமைச்சர்களை நியமித்தமை

# அரசியலமைப்பை மீறும் செயற்பாடு

**உங்களின் நடவடிக்கை குறித்து பாராளுமன்றில் கேள்வி எழுப்பப்படலாம்**
**பிரதமர் ரணில் ஜனாதிபதிக்கு கடிதம்**

(கொழும்பு)

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்களின் பதவிக்கு பதில் அமைச்சர்களை நியமித்தமை அரசியலமைப்பை மீறும் செயற்பாடு என பிரதமர் ரணில் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

மேலும் உங்களின் நடவடிக்கை குறித்து பாராளுமன்றில் கேள்வி எழுப்பப்படலாம் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். ▷23

# வடக்கு கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடுமென்று கூறியது உண்மைதான்



### உலகில் முஸ்லிம்கள் அதிகம் என்பதனை இலங்கை முஸ்லிம்களை உற்சாகப்படுத்த கூறினேன்

### தெரிவுக்குழு முன் ஹிஸ்புல்லாஹ் சாட்சி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடுமென்று கூறியது உண்மைதான் என தெரிவுக்குழு முன் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் நேற்று சாட்சியமளித்தார்.

மேலும் உலகில் முஸ்லிம்கள் அதிகம் என்பதனை இலங்கை முஸ்லிம்களை உற்சாகப்படுத்தவே கூறினேன் எனத் தெரிவித்தார். ▷23

## யாழ். குடாவில் நேற்று இரவு

### திடீரென காற்றுடன் கூடிய கன மழை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்றிரவு பரவலாக இடி மற்றும் காற்றுடன் கூடிய கன மழை பெய்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசங் ▷23

### மின்சார சபைக்கு

## வருடம் தோறும் 80 கோடி நட்டம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை அதிகாரிகள், மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு ஆகியன இணைந்து இலங்கை மின்சார சபைக்கு கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

இதனால் இதுவரையில் வருடாந்தம் 80 ▷23

### ஹிஸ்புல்லாவின் கருத்துக்கு

## முஸ்லிம்களின் எதிர்ப்பு வரவேற்கத்தக்கது

### சபாநாயகர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அண்மையில் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்கு இலங்கை முஸ்லிம் சமூகத்திற்குள் இருந்து வெளிக்காட்டப்படும் எதிர்ப்பை வரவேற்பதாக சபாநாயகர் கரு ஜய ▷23

## பொறுப்புக்கூறலில் முன்னேற்றத்தை காண்பிக்குமாறு இலங்கையை தொடர்ந்து வற்புறுத்துவோம்

### அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் அலைஸ்



(கொழும்பு)

மனித உரிமைகளை மதிக்க வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தும் என தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களிற்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் அலைஸ் ஜி வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஆசிய பசுபிக்கிற்கான வெளிவிவகார குழுவிற்குச் சமர்ப்பித்துள்ள எழுத்துமூல அறிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளில் இலங்கையுடன் அமெரிக்கா தோளோடு தோள் நிற்கின்றது என தெரிவித்துள்ள ▷23

## முல்லை விளாங்குளத்தில் நேற்று இரவு துப்பாக்கிச் சூடு

### ஒருவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - வன்னிவிளாங்குளம் பகுதியில் துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ▷23

### புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக ருவன் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்



### கருக்கலைப்புக் குற்றச்சாட்டு

## முஸ்லிம் மருத்துவர் ஒருவர் தலாவாக்கலையில் கைது

(கொழும்பு)

சட்டவிரோத கருக்கலைப்பு நடவடிக்கையை முன்னெடுக்கின்றார் என்ற குற்றச்சாட்டில் சாய்ந்தமருதைச் சேர்ந்த முஸ்லிம் மருத்துவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ▷23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில்,கௌரவமான சிறிய குடும்பம் ஒன்றிற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.உடனே தொடர்பு கொள்ளவும்

**0770527090**

## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



### ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கக் கூடியவரும் இலங்கையில் பலதரப்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றவருமான பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்களால் பயிற்சிகள் நடாத்தப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எளிய முறை உடற்பயிற்சிகள்
எளிய முறை தியானப்பயிற்சிகள்
காயகல்ப்பப் பயிற்சி
அகத்தாய்வுப் பயிற்சிகள்

காலம்: 15.06.2019 சனிக்கிழமை தொடக்கம் 21.06.2019 வெள்ளிக்கிழமை வரை

நேரம்:மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை

பயிற்சிகளை வழங்குபவர்கள் :மனவளக்கலை பேராசிரியர் உழவன் முத்துவேல் துணைப் பேராசிரியர் த.நந்தகுமாரன்

அகத்தாய்வு 2ம் நிலை 15.06.2019 சனிக்கிழமை மதியம் 2.30 மணிக்கும் மற்றும் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
தொ.இல:0212222772



## 60 ஆவது அகவை பணி நிறைவு மணிவிழா - 2019

### திருமதி காந்தரூபி காசிலிங்கம்
### (உப அதிபர்) (கலைப்பட்டதாரி) (SLTS-I)



சுட்டுவிரல் தொட்டெழுதி,
எழுத்தறிவித்த ஆசான்;
கருத்திலும் கடமை காத்த
கண்ணியப் பெருந்தகை;
சொல்வீர வீச்சிலும் சித்தம் கொண்ட
அறப்பணியில் பெருமாட்டி...
பகுதித் தலைவராய் உப அதிபராய்
22 ஆண்டுகள் எம் பள்ளியில்
சேவையாற்றி பணி நிறைவு காணும் இவரை
நீடூழி காலம் வாழ்க!வாழ்கவென
வாழ்த்துகின்றோம். போற்றுகின்றோம்.

சேவை விபரம்
நு/நோர்வூட் தமிழ் வித்தியாலயம்- 18.06.1985-09.02.88
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை-9.2.88-31.12. 1989
கிளி/கோயில்வயல் சி.சி.த பாடசாலை-01.02. 1990-14.4.1990
கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலை-15.04.1990- 19.07.1992
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி-20.07.1992- 31.12.2007
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்- 01.01.2008-16.01.2008
கிளி/இராமநாதபுரம் ம.வி17.01.2008-05.11. 2009
வ/ஸ்கந்தபுரம் வரணி வித்தியாலயம்-09.11. 2009-05.06.2010
வ/திருஞானசம்பந்தர் வித்தியாலயம்-06.06. 2010-31.10.2010
வ/விபுலானந்தர் கல்லூரி-01.01.2011-31.12. 2011
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி-01.01.2012- 13.06.2019 இன்று வரை

வாழ்த்துவோர்:-
கல்லூரிச்சமூகம்
பாடசாலை அபிவிருத்திக் குழுச்சங்கம்
பழைய மாணவர் சங்கம்
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி


## மரண அறிவித்தல்



### இராஜரட்ணம் நடராஜசுந்தரம்

யாழ் பருத்தித்துறை புலோலி கிழக்கு, நீண்டியம்பத்தையை பிறப்பிடமாகவும் லண்டன் wimbledon ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் நடராஜசுந்தரம் அவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தருமலிங்கம் மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சாரதாதேவி அவர்களின் பாசமிகு கணவரும் வள்ளி,கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் லக்சுமி அவர்களின் அன்பு மாமனாரும், ஹரிஸ் அவர்களின் அன்பு பேரனும் , தவமணிதேவி, மல்லிகாதேவி, லக்சுமிதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பூபாலசிங்கம், பொன்னுத்துரை, மனோகரன், பத்மநாதன், விநாயகமூர்த்தி, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரமூர்த்தி, சத்தியமூர்த்தி ,காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சகுந்தலாதேவி, வசந்தாதேவி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்மாவதி, தயாவதி, சுசாந்தி, சுதர்ஸா, சிவலிங்கம், தயாளினி, ராகவன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நாளை மறுதினம் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி:-திருமதி சாரதாதேவி நடராஜசுந்தரம்
00447742820557(லண்டன்)
மாமனார் :-சி.தருமலிங்கம்(சமாதான நீதவானும்,ஓய்வுநிலை அதிபரும்)
0212263023
'பூமகள் வாசம்'
புலோலி

## அந்தியேட்டி அழைப்பு



மலர்வு 25 . 04 . 1953

உதிர்வு 16 . 05 . 2019

### அமரர் செல்லையா நாதன்

(நீதன் மரக்காலை உரிமையாளர்)

கொற்றாவத்தை,மலையந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் சமரபாகு,சரியவன்,வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவன் செல்லையா நாதன் அவர்கள் இந்திராவதியின் அன்புக் கணவரும் நவநீதன்,சரிதா,ராகுலன் (லண்டன்), சஞ்சீவன், நிருபன்(கட்டார்),ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபன், மகாஜினி,ஞானதுஷா ஆகியோரின் மாமனாரும் ராகவி சாம்பவி,மேகவி ஆகியோரின் பேரனும் ஆவார்.

கடந்த 16.06.2019 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் செல்லையா நாதன் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(15.06.2019) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.இந்நிகழ்வில் தாங்களும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்த சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சரியவன்
சமரபாகு
வல்வெட்டித்துறை (7912) குடும்பத்தினர்

## குற்றம் செய்தவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை

# தெரிவுக்குழுவின் செயற்பாடு மூலம் இறுதித் தீர்வை எட்ட முடியாது

## ஐ.தே.கவின் நடவடிக்கைக்கு ஐ.ம.சு.கூ.எதிர்ப்பு



(கொழும்பு)

**நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் மூலம் ஒருபோதும் இறுதித் தீர்வை எட்ட முடியாது எனத் தெரிவித்த, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர, குற்றம் செய்தவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழுங்கப்படும் எனவும் தெரிவித்தார்.**

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காகவே தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் அது முறையற்ற விதத்தில் செயற்படுகின்றது. ஊடக சந்திப்பைப் போன்று தெரிவுக்குழு விசாரணைகள் இடம்பெறுகின்றன. மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படாது தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட, பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளவர்கள் தெரிவுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிலரும் அதிருப்தியிலுள்ளனர்.

தெரிவுக்குழு நியமனத்திற்கு நாம் கையெழுத்திடவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினர் அதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை மற்றும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமையின் பின்னரே இதன் பாரதூரத் தன்மை பற்றி சிந்தித்தோம். எவ்வாறிருப்பினும் தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஒருபோதும் இறுதித் தீர்வை வழங்கப்போவதில்லை. ஆனால் குற்றம் செய்தவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படும் என்று உறுதியாகக் கூற முடியும்.

இம்மாத இறுதியில் இலங்கை வரவிருக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பம்பியோ இராணுவ விவகாரங்களில் செய்து கொள்ளவிருக்கும் ஒப்பந்தம் தொடர்பான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு இலங்கையை வலியுறுத்தவுள்ளதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த ஒப்பந்தத்தில் உள்நாட்டு இராணுவத்தினருக்கு உள்ள கைது செய்தல், வழக்கு தொடர்தல், நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆனால் அமெரிக்காவுடன் செய்துகொள்ளப்படவுள்ள இந்த ஒப்பந்தம் தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுவதால் இதில் எமக்கு உடன்பாடு கிடையாது.

வெளிநாடுகளுடன் முரண்பட வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. வெளிநாட்டு தொடர்புகள் இன்றி எம்மால் அபிவிருத்தியை துரிதப்படுத்தவும் முடியாது. ஆனால் அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்படவுள்ள இந்த ஒப்பந்தம் நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதால் இது குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது எனவும் அமரவீர தெரிவித்தார். (இ-7)

## பயண எச்சரிக்கையை ஆஸியும் நீக்கியது

(சிட்டி)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை தொடர்பாக விடுக்கப்பட்டிருந்த பயண எச்சரிக்கையை உடன் அமுலுக்கு வரும் வகையில் அவுஸ்திரேலியா தளர்த்தியது.

அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில் இலங்கையில் ஊரடங்கு உத்தரவு மற்றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை மற்றும் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டமை ஆகியவற்றால் இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் இலங்கைக்கு பயணம் செய்யும் அவுஸ்திரேலியர்கள் கவனமாகவும் அவதானத்துடனும் இருக்க வேண்டும் என்றும் எச்சரித்தது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் இராணுவ மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகளிலும் மற்றும் வீதிகளில் செல்லும்போதும் அவதானமாக இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கோரிக்கைகளுக்கு அமைவாக இதற்கு முன்னர் சீனா, சுவிட்சர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், இந்தியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளும் பயண எச்சரிக்கைகளை தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## விதிகளை மீறிய வர்த்தகர்களுக்கு 45 ஆயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களை மீறிய யாழ்.வர்த்தகர்களுக்கு நேற்று வியாழக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றம் 45 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது.

யாழ்.நீதவான் நீதிமன்றத்திற்குட்பட்ட பகுதிகளில் பாவனையாளர் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றுவளைப்பின் போது பாவனையாளர் சட்டங்களை மீறிய மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதே குறித்த அபராதம் நீதவானால் விதிக்கப்பட்டது. (5-10)

## ஜனாதிபதி தஜிகிஸ்தானுக்குப் பயணம்



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தஜிகிஸ்தானுக்குப் பயணமானார். நேற்றுக் காலை இந்த விஜயத்தை மேற்கொண்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்தது.

ஜனாதிபதியுடன் சில முக்கிய அதிகாரிகளும் பயணித்தனர். (இ-7)

## விசேட தேவையுடையோருக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

### அரசு நடவடிக்கை



(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கமைய, விசேட தேவையுடையவர்களுக்காக வழங்கப்படவுள்ள கொடுப்பனவு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாவாக அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுமென நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-7)

## தொடர் குண்டு வெடிப்பு எதிரொலி

# அமைதி சுட்டெண் வரிசையில் இலங்கை மேலும் பின்னடைவு

### 72 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டது

(கொழும்பு)

உலக அமைதி சுட்டெண் தரவரிசையில், இலங்கை மேலும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

அமெரிக்காவின் பொருளாதார மற்றும் அமைதி தொடர்பான நிறுவனம் வருடாந்தம் மேற்கொள்ளும் மதிப்பீட்டு தரவரிசைப் பட்டியலில், இந்த வருடம் இலங்கை 72 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டில், 67 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, இந்த வருடம் (2019) 72 ஆவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டது.

உலகிலுள்ள 163 நாடுகளுக்கிடையில் குறித்த மதிப்பீட்டுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. தென்னாசிய நாடுகளில் அமைதியான நாடாக நேபாளம் முன்னணியில் உள்ளது.

இதற்கமைய, தரவரிசையில் நேபாளம் 15 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், உலகின் அமைதி நாடு என்ற வகையில், ஐஸ்லாந்து உலக நாடுகள் மத்தியில் முதலிடத்தை வகிக்கும். அதே வேளை, உலகில் அமைதியற்ற நாடாக முதலிடத்தில் ஆப்கானிஸ்தான் உள்ளது. இதற்கமைய, ஆப்கானிஸ்தான் 163 ஆவது இடத்திலுள்ளது.

கடந்த வருடம் (2018) அமைதியற்ற நாடு என்ற வகையில் சிரியா 163 ஆவது இடத்தில் இருந்ததுடன், இந்த வருடம் ஒரு இடம் முன்னேறி 162 ஆவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பல்கலை.மாணவி மீது காதலன் கத்திக் குத்து

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற கத்திக் குத்தில் படுகாயமடைந்த மாணவி ஒருவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

21 வயது குறித்த மாணவி அவரது காதலனால் கத்திக் குத்துக் குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நபரை பொலிஸார் கைது செய்தனர். (இ-7)

# அணிக்கு மீண்டும் திரும்பும் வேகப்பந்து வீச்சாளர் நுவான்



உலகக் கோப்பை தொடரில் காயமடைந்து சிகிச்சைக்காக ஓய்வில் இருந்த இலங்கை நட்சத்திர பந்துவீச்சாளர் நுவன் பிரதீப், அணிக்கு திரும்ப உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 9ஆம் திகதி பிரிஸ்டல் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்ட போது இலங்கை நட்சத்திர பந்து வீச்சாளர் நுவன் பிரதீப் விரலில் காயம் ஏற்பட்டது.

இதனால். சிகிச்சைக்காக ஓய்வில் இருந்த அவர் எப்போது அணிக்கு திரும்புவார் என்ற கேள்வி எழுந்தது. கடந்த வாரம் முதல் விரல் காயத்தால் அவதிப்பட்டு வந்த நுவன் பிரதீப் முதன் முறையாக மீண்டும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி ஓவல் மைதானத்தில் இலங்கை-அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன. அதற்குள் முழுமையாக குணமடையும் பிரதீப், தனது உடற்தகுதி பெற்று அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக களமிறங்குவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# உலகக் கிண்ணத்தில் தொடரும் மழை நேற்றைய போட்டியும் கைவிடப்பட்டது

நாட்டிங்காமில் நடைபெற இருந்த ஆட்டம் மழையால் கைவிடப்பட்டு இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டன.

இந்தியா - நியூசிலாந்து இடையிலான உலகக்கோப்பை லீக் ஆட்டம் நாட்டிங்காமில் நேற்று நடைபெறுவதாக இருந்தது. ஆனால் நேற்று முன் தினத்தில் இருந்து நாட்டிங்காமில் கடும் மழை பெய்து வந்தது. இதனால் போட்டி நடக்குமா? என்ற சந்தேகம் எழும்பியது.

போட்டிக்கான டாஸ் சரியாக 2.30 சுண்டப்படும். அப்போது மழை பெய்யவில்லை. ஆனால் மேகம் கருமையாக திரண்டு இருந்தது. இதனால் அரைமணி நேரம் கழித்து, சூழ்நிலையை பார்த்து டாஸ் சுண்டப்படும் என தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவித்த மறுநிமிடத்தில் இருந்து கனமழை பெய்யத் தொடங்கியது. இந்திய நேரப்படி போட்டி தொடங்கும் மதியம் 3 மணியில் இருந்து இரவு 7.40 மணி வரை மழை ஓயவில்லை. இதனால் போட்டி கைவிடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆகவே, நியூசிலாந்து மற்றும் இந்தியாவுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டன. நியூசிலாந்து மற்றும் இந்தியாவுக்கு தலா ஒரு புள்ளி வழங்கப்பட்டன.


# சிறகுகளுக்குப் பதிலாக மனவுறுதியில் பறக்கிறோம் அதைக் கத்தரித்துவிட முடியுமா- தவான் டுவிட்

உலகக்கோப்பை தொடரில் இருந்து தற்காலிகமாக விலகிய பின் இந்திய நட்சத்திர இடது கை துடுப்பாட்டகாரர் ஷிகர் தவான், கவிதைஒன்றை டுவிட் செய்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் ஆட்டத்தின் போது இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவானுக்கு கையில் காயம் ஏற்பட்டது.

இத னால், அவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இருந்து தற்காலிகமாக விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், உலகக் கோப்பை தொடரிலிருந்து விலகிய பின் ஷிக்கர் தவான் தனது ட்விட்டர் பக்கத்தில் கவிதை ஒன்றை பதிவிட்டுள்ளார்.



அதில், காயம் ஏற்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படத்துடன், சிறகுகளுக்கு பதிலாக மன உறுதியால் நாம் பறக்கிறோம். அதனை கத்தரித்துவிட முடியுமா என்ற உருது மொழி கவிஞர் ரஹட் இந்தோரியின் கவிதையை பதிவிட்டுள்ளார். (க)

# பும்ராவுடன் காதலா? புலம்பும் அனுபமா





பிரேமம் படம் மூலம் அறிமுகமானவர் அனுபமா பரமேஸ்வரன். தமிழில் தனுசுடன் கொடி படத்தில் நடித்தார். தமிழ், மலையாளத்தில் வாய்ப்பு இல்லாததால் தெலுங்கு படங்களில் பிசியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

அனுபமா பரமேஸ்வரனும், உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் வீரர் பும்ராவும் காதலிப்பதாக கிசுகிசு பரவியது. டுவிட்டரில் பும்ரா பின்தொடரும் ஒரே நடிகை அனுபமாதான். பும்ராவின் டுவிட்டுகளை ஒன்று விடாமல் அனுபமா ரீ டுவிட் செய்கிறார். பதிலுக்கு பும்ராவும் அனுபமா பரமேஸ்வரனின் டுவிட்டுகளை லைக் செய்கிறார்.

இதைப் பார்த்து தான் அவர்களுக்கு இடையே காதல் என்று பேச்சு கிளம்பியது.

இது குறித்து அனுபமாவிடம் கேட்டபோது அவர், 'எனக்கும், பும்ராவுக்கும் காதல் எல்லாம் இல்லை. நாங் கள் நல்ல நண்பர்கள் மட்டுமே...' என்று தெரிவித்துள்ளார். (க)

# முரளிதரனின் பந்து கடினமானது மனந்திறந்து கூறிய யுவராஜ்சிங்

2007 மற்றும் 2011ஆம் ஆண் டுகளில் நடைபெற்ற 20 ஓவர் மற்றும் 50 ஓவர் உலகக்கோப்பையை இந்தியா வெல்ல முக்கிய காரணமாக இருந்த வரும் சிறந்த சகலதுறை துடுப்பாட்ட வீர ருமான யுவராஜ் சிங் தனது ஓய்வு முடிவை கடந்த ஜூன் 10 ஆம் திகதி அறிவித்தார்.

இந்நிலையில் தற்போது சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தான் சந்தித்த மிகவும் அபாயகரமான பந்து வீச்சாளர்கள் குறித்து யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஓய்வு அறிவிப்பை வெளியிட்ட நிகழ்ச்சியில் யுவராஜ் சிங் கூறுகையில்,

உலகில் உள்ள அனைத்து



கிரிக்கெட் அணிகளுடனும் விளையாடியுள்ளேன். பல்வேறு அணி வீரர்களின் பந்து வீச்சினை எதிர் கொண்டுள்ளேன்.

ஆனால் இல ங்கை அணியின் முன்னாள் வீரரும் சுழற் பந்து ஜாம்பவானு மான முத்தையா முரளிதரனின் பந்தினை எதிர்கொள்வது என்பது எப்போதுமே மிகவும் கடினமாக இருந்தது.


அவரைப் போலவே அவுஸ்திரேலிய அணி யின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத்தின் பந்து வீச்சையும் எதிர் கொள்ளவே முடியாது.

நான் பார்த்து மிகவும் பிரமித்த வெளிநாட்டு துடுப்பாட்ட வீரர் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங். அவரது திறமை ஆச்சரியம் அளிக்கும் வகையில் இருந்தது. அவரை போலவே மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல் மற்றும் தென்னாபிரிக்க அணியின் ஏபி டி வில்லியர்ஸ் ஆகியோரது ஆட்டமும் என்னை பிரமிக்க வைத்தது என யுவராஜ் தெரிவித்தார். (க)

# உலகக்கோப்பை இந்தியாவுக்கே கூகுள் சுந்தர் பிச்சை நம்பிக்கை

உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் நடைபெற்று வருகிறது. எந்த அணி வெற்றி பெற்று கோப்பையை வெல்லும் என்பது குறித்து பிரபலங்கள் கணித்து வருகின்றனர். இந்த வகையில் தமிழகத்தைச் சேர்ந்த கூகுள் நிறுவன சுந்தர் பிச்சை, இந்தியாதான் கோப்பையை வெல்லும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சுந்தர் பிச்சை கூறுகையில் "உலகக்கோப்பை இறுதிப் போட்டி இந்தியா - இங்கிலாந்துக்கு இடையில்தான் நடக்கும். ஆனால், அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து அணிகளும் சிறப்பாக விளையாடி வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டும் மிகமிக சிறந்த அணி. இந்தியா கோப்பையை வெல்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. அதற்கு பல தடைகளை தாண்ட வேண்டும்.



நான் முதன் முறையாக அமெரிக்கா வந்தபோது. பேஸ் பால் ஆட்டத்திற்கு ஏற்ப என்னை மாற்றிக்கொள்ள முயற்சி செய்தேன். அந்த வகையில் கிரிக்கெட்டை விட அது சற்று சவாலானது என்று நான் சொல்வேன். என்னுடைய முதல் ஆட்டத்தால் நான் பெருமை அடைந்தேன். ஏனென்றால், நான் அடித்த பந்து பின் பக்கம் வெகுதூரம் சென்றது. கிரிக்கெட்டில் அது சிறந்த ஷொட். அந்த ஷொட் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சிறந்த ஷொட் என்று நினைத்தேன். ஆனால், மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

கிரிக்கெட்டில்துடுப்பாட்ட வீரர் ஓடும்போது தன்னுடன் பட்டையும் கொண்டு செல்வார். ஆகவே, நான் பட்டுடன்தான் ஓடுவேன். அது சற்று கடினமாக இருப்பதாக உணர்ந்தேன். பல விடயங் களை மாற்றியுள்ளேன். ஆனால், கிரிக்கெட்டுதான் என்னுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறது" என்றார். (க)

# அடிப்படை வாதம் குறித்த உண்மையை அம்பலப்படுத்துவேன்- ஞானசாரதேரர்


(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த குண்டுத் தாக்குதல் குறித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சாட்சி வழங்குவதற்கு விரும்புவதாக பொதுபல சேனா அமைப்பு அறிவித்தது.

அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் உட்பட சிலர் தெரிவுக் குழுவின் முன்னிலையில் ஆஜராக விருப்பம் தெரிவித்தனர்.

தமக்கான அனுமதியை வழங்குமாறு பொதுபல சேனாவால் சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்தும், இவ்வாறான நிலைமை ஒன்று ஏற்படக்கூடும் என்றும் முன்னரே அவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் அடங்கிய இறுவெட்டுக்களும் அனுப்பி வைக்கப்பட்டன.



இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்த பல்வேறு தகவல்கள் எங்களிடம் உள்ளன.

அவை விசாரணைகளுக்கு பெறுமதியானவை எனவும் பொதுபல சேனா அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# அமைச்சரவைக் கூட்டம் 18 ஆம் திகதி இடம்பெறும்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. அதன்படி அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறும்.

அமைச்சரவைக் கூட்டம் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெறும். எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியால் இரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில் அடுத்த அமைச்சரவைக் கூட்டம் தொடர்பான அறிவிப்பு ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்படடது.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்தக் குழுவில் முன்னிலையாகி பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினர் என பல உயரதிகாரிகளும் சாட்சியம் வழங்கி வருகின்றனர்.

இதுவரை இடம்பெற்ற அமர்வுகளில் பல அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியானதுடன், ஜனாதிபதியின் கவனயீனம் காரணமாகவே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன எனும் கோணத்திலேயே பலர் சாட்சியமளித்திருந்தனர்.

இதனையடுத்து சில தினங்களுக்கு முன்னர் கூட்டப்பட்ட விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது, நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நிறுத்த வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அத்தோடு தெரிவுக்குழுவின் அமர்வுகளை நிறுத்தாவிட்டால், அமைச்சரவைக் கூட்டங்களைப் புறக்கணிப்பேன் எனக் கூறியதுடன், இந்த வாரம் இடம்பெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்தையும் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மாணவர்களுக்கு இலவச பண்டைய தோப்புக்கரணம் - மூளைக்கு யோகா- Brain Yoga

தோப்பு என்றால் கைகளால் பிடிப்பது கரணம் என்றால் காது. நாம் முதல் முதற்கடவுள் பிள்ளையாருக்கு தோப்புக் கரணம் இட்டு வழிபடுவதை எல்லோரும் அறிவோம்.



சற்குரு அவர்கள் பண்டைய தோப்புக் கரணத்தை தற்போது தனது கத்தயோகா ஆசிரியர்களுக்கு பயிற்றுவித்துள்ளார். தோப்புக் கரணத்தை ஆய்வு செய்து எமது மூளை சமநிலை அடைவதுடன், கிரகிக்கும் தன்மையும் கூடி, மன உளைச்சல், மனபதட்டம், மறதி என்பவற்றுக்கு உதவுகின்றது என்று கண்டு பிடித்துள்ளார்கள். நான் வைத்திய கலாநிதி கௌரிபாலன் சற்குருவின் கீழ் கத்தயோகா ஆசிரியராக கடந்த ஆறு வருடங்களாக பயில்விக்கின்றேன். ஆனி மாதம் 21ஆம் திகதி உலக யோகா தினத்தை இட்டு எமது எல்லா மாணவர்களுக்கும் பண்டைய தோப்புக்கரணத்தை பயிற்றுவிக்க ஆவலாக இருக்கின்றேன். மிக இலகுவாக இதை பயிற்றுவிக்க முடியும். எனவே எமது எல்லா மாணவர்களுக்கும் இதை பழக்க அனுமதிக்குமாறு எமது ஆசிரியர்களை தாழ்மையாக வேண்டுகின்றேன்.

தொடர்பு :- கௌரிபாலன் 071 924 7919



14 மில்லியன் வாடிக்கையாளர்களின் மனம் கவர்ந்த Dialog இடமிருந்து

TRC/D/SEA/19/02

TRIPLE BLASTER

முற்கொடுப்பனவு மொபைல் Plan

D2D 1000 நிமிடங்கள்

D2D 1000 SMS

1250MB Data

50% 4G போனஸ் உடன்

ரூ.260/-*

*வரி உள்ளடங்களாக கட்டணம் ரூ.345/-

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

30 நாட்களுக்கு செல்லுபடியாகும்

செயற்படுத்திக்கொள்ள ரூ.345/-ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்

Dialog

எதிர்காலம் இன்றே.


## இராசி பலன்

**மீனம்** – கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மேடம்** – வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உடல்நலன் சீராகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்** – பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், வாகன சுகமுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** – தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சூரி, சுக் | ராகு, புத,செவ் |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் | | |
| | ரேவதி, அச்சுவினி | | |
| சனி, கேது | குரு | சந் | |

14.06.2019

வைகாசி 31, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு

துவாதசி பிற்பகல் 4.28 மணிவரை

சுவாதி முற்பகல் 11.30 மணிவரை

சுபநேரம் 5.53-7.23 மணிவரை

இராகுகாலம் 10.23-11.53 மணிவரை

பிரதோச விரதம்

வளவன்

**கடகம்** – தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** – பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், பிறர் உதவியுண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** – செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** – சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், அதிர்ஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** – பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வருகையுண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.

**துலாம்** – தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** – மக்கள் போற்றும் வழியமைய விநாயகரை வழிபட வேண்டிய நாள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# வடமாகாண கலை அம்சங்களை மையப்படுத்தி ஆய்வுக் கருத்தரங்கு

## ஆக்கங்களை அனுப்பக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வடமாகாணக் கலை மரபுகளில் தற்காலத்தில் சீர்செய்ய வேண்டிய, அபிவிருத்தி செய்ய வேண்டிய குறைபாட்டம்சங்களை இனங்கண்டு அவற்றை முழுமை பெறச் செய்ய முயற்சிக்கும் நோக்கில் நடைபெறும் ஆய்வுக் கருத்தரங்கில் சமர்ப்பிப்பதற்காக கீழ்வரும் தலைப்புக்களில் ஆகக்கூடிய ஐந்து பக்கங்களுக்கு மேற்படாது குறுகிய எழுத்தாக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

அவ் எழுத்தாக்கங்களை உதவிப்பணிப்பாள், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், செம்மணி வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 01.07.2019 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். அனுப்புபவர் முழுப்பெயர், பதவி, முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஆய்வுக்கருத்தரங்கு நடைபெறும் இடம் மற்றும் திகதி என்பன பின்னர் அறிவிக்கப்படும்.

தலைப்புக்களாவன:-

1. தமிழர்களுக்கென தனித்துவமான ஆடல் வடிவத்தினை உருவாக்குவது தொடர்பான முயற்சி.

2. வடமாகாண அழகியல் கலைகளைச் சர்வதேச ரீதியில் கொண்டு செல்வது தொடர்பான கூட்டு முயற்சி.


3. நவீன தொழில்நுட்பங்களினூடான கலை வளர்ச்சி ஆரோக்கியமானதா? ஆரோக்கியமற்றதா? ஆரோக்கியமற்றதாயின் நவீன தொழில்நுட்பத்தினூடாக கலை தனது பாரம்பரியத்தை இழக்காது அடுத்த நிலைக்கு செல்வதன் வழிமுறைகள்.

4. பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் வகிபாகம்/மனித வளர்ச்சியும் கலைகளும்.

5. சுதேசியக் கலைகளின் சமகாலப் போக்கு ஆகிய தலைப்புக்களில் எழுத்தாக்கங்கள் எதிர்பார்க்கப்படு கின்றன என வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (5)




# வீதிக்குப் பெயர்ப்பலகை




(யாழ்ப்பாணம்)

75 ஆண்டுகளுக்கு மேலாக வீதி அபிவிருத்தித் திணைக்களப் பதிவேடுகளில் செம்மணிக்குளம் வீதி எனக் காணப்பட்ட கல்வியங்காடு புதிய செம்மணி வீதி வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் கோரிக்கைக்கு அமைய தற்பொழுது புதிய செம்மணி வீதியாக மாற்றப்பட்டது.

கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக வீதி அபிவிருத்தித் திணைக்களப் பதிவேடுகளில் செம்மணிக்குளம் வீதி என்று காணப்பட்ட போதிலும் அப் பகுதி மக்கள் புதிய செம்மணி வீதி என்றே பயன்படுத்தி வந்தனர்.

இந் நிலையில் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பதிவேட்டில் புதிய செம்மணி வீதியாக மாற்றுமாறு சிவஞானம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தை கோரியிருந்தார்.

அவைத் தலைவரின் கோரிக்கையை ஏற்று வீதி அபிவிருத்தி திணைக்களம் தமது பதிவேடுகளில் புதிய செம்மணி வீதி என்று மாற்றியமைத்தது.

இதனை சிவஞானம் நல்லூர் பிரதேச சபைக்கு தெரியப்படுத்தியதையடுத்து தற்பொழுது நல்லூர் பிரதேச சபையால் புதிய செம்மணி வீதி என்ற பெயர்ப் பலகை நாட்டப்பட்டது. (இ-9)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தின திருமுறை மனனப்போட்டி பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

பரிசளிப்பு விழாவுக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை க.சுதாமதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு திருமுறை மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவார்.

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு நடைபெற்ற திருமுறை மனனப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்றோர்,

தரம்-1, முதலாமிடம் தே. அமிர்தன் (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறி), இரண்டாமிடம் பி.துஷாந் (உரும்பிராய் கற்பக விநாயகர் அறநெறி), மூன்றாமிடம் ய.மதுஷாயினி (கல்வியங்காடு இ.த.க.பாடசாலை).

தரம்-2, முதலாமிடம் கு. அக்சயா (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), இரண்டாமிடம் ச.மகிஷன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் இ.டில்சிக்கா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மூன்றாமிடம் ப.அக்ஷயா (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி).

தரம்-3,4 கீழ்ப்பிரிவு, முதலாமிடம் இருவர் சு.ஸஸாங்கி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), க.சதுஸ்ரிகா (ஏழாலை கருணாகரப் பிள்ளையார் அறநெறி), மூன்றாமிடம் கி.டிலக்சன் (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி). (இ)

# மத்தியஸ்த சபை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

தற்காலிக (ஜே/81) கோட்டை மீனாட்சி அபிவிருத்திச்சங்கத்தில் இயங்கி வரும் யாழ்ப்பாணம் மத்தியஸ்த சபை எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் யா/நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலையில் நடைபெறுமென மத்தியஸ்த சபைத் தவிசாளர் திருமதி.கௌரி முரளிதரன் தெரிவித்துள்ளார். (5-106)

# பிரமோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான விகாரி வருஷ திவ்ய பிரமோற்சத்தை முன்னிட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் கணபதி ஹோமம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பற உற்சவமும் மறுநாள் காலை 9.30 மணியளவில் இரதோற்சவமும் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 8 மணியளவில் அபிஷேகமும் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும். (5)

# 3 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மேலதிகமாக கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொடிகாமம் மட்டுவில் சரசாலை பிரதேசங்களை சேர்ந்த நான்கு பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவ் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 900 மில்லி லீற்றர் கள் வைத்திருந்த மட்டுவில் நபருக்கும் சரசாலை நபருக்கும் தலா 500 ரூபாய் வீதம் ஆயிரம் ரூபாய் அபராதமும் 2 லீற்றர் கள் வைத்திருந்த கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த இருவரில் ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் மற்றையவருக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (5-10-114)

# முழுநிலாநாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தின் முழுநிலாநாள் கருத்தரங்கு நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இக் கருத்தரங்கில் வளவாளராக யாழ்."கைகொடுக்கும் நண்பர்கள்" அமைப்பின் ஸ்தாபகர் மாவை T.நித்தியானந்தன் கலந்து கொண்டு "சிறு கவலைகளும் ஆறாத மனத்துயரும் விடுபட வழி என்ன?" எனும் தலைப்பில் உரையாற்றுவார். உரையாடலின் நிறைவில் கலந்துரையாடலும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

# முன்னோடிப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று வெளியாகின்றன

(யாழ்ப்பாணம்)

வருடாவருடம் நாடளாவிய ரீதியில் மொறட்டுவ பல்கலைக் கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்கள் நடத்தும் க.பொ.த.உயர்தர கணித மற்றும் உரியிரியல் பிரிவு மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை இம்முறை 10 ஆவது வருடமாக நடைபெறவுள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 12 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது. இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று வெளியாகின்றன. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பான விபரங்களை அறிந்து கொள்ள 077 982 6916 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது Moraetamils@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை www.moratamils.com எனும் இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் 27.06.2019 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டது. (இ)

# விதிமுறைகளை மீறியவர்களுக்கு 27 ஆயிரத்து 500 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து விதி முறைகளை மீறிய மூவருக்கெதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் 27 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்தது.

குறித்த பொலிஸ் பிரிவில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமை மற்றும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை ஆகிய குற்றங்களின் கீழ் கொடிகாமப் பொலிஸாரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் முதலாம் நபருக்கு 9 ஆயிரத்து 500 ரூபாய் அபராதமும் இரண்டாம் நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் மூன்றாம் நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் மூன்று மாதத்துக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை தற்காலிகமாகத் தடுத்து வைக்கவும் உத்தரவிட்டார். (5-10-114)





யாழ்/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.கஜதீபன், யாழ்.வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்

# கௌரவ ஈ.சரவணபவன்

## அவர்களின் முயற்சியினால்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில்

**இராஜபுரி, கோயிலாக்கண்டி கிராம வீடுகளுக்கான அடிக்கல் நாட்டு விழா-2019**

இடம் :- கைதடி கிழக்கு இராஜபுரி கிராமம்
காலம் :- 14.06.2019 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- காலை 9.00 மணி

இடம் :- கைதடி நாவற்குழி, (கோயிலாக்கண்டி)
காலம் :- 14.06.2019 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- நண்பகல் 12.00 மணி

**முதன்மை விருந்தினர்**

கௌரவ. ஈ.சரவணபவன் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.கிளிநொச்சி மாவட்டம். தலைவர், உதயன் குழுமம்)

**சிறப்பு விருந்தினர்கள்**

திரு. M.ரவீந்திரன் அவர்கள்
(மாவட்ட முகாமையாளர்,தேசிய வீடமைப்பு அதிகார சபை)

திருமதி தேவநந்தினி பாபு அவர்கள்
(பிரதேச செயலர் - தென்மராட்சி)

**இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

(C-9138) **தென்மராட்சி பிரதேச செயற்பாட்டுக்குழு**

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-22, ஓட்டுமடம் வீதி. 29/27 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கந்தையா தம்பிப்பிள்ளை கைம்பெண் அன்னலட்சுமி எனும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் ஓட்டுமடம் 15/5 தேவாலய வீதியைச் சேர்ந்த கந்தையா தம்பிப்பிள்ளை கைம்பெண் அன்னலட்சுமி என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.லிங்கா துரைராஜா முகதாவில் 02.09.2005 ஆம் திகதியிடப்பட்ட 5473 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் தனது சீவிய உரித்துக்கமைவாக திருச்சிற்றம்பலம் கலாதேவிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். பின்னர் திருச்சிற்றம்பலம் கலாதேவி பிரசித்த நொத்தாரிசு திருமதி.எஸ்.சிவபாதம் முகதாவில் 01.10.2011 ஆம் திகதியிடப்பட்ட 5316 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் தனது சீவிய உரித்துக்கமைவாக தனது மகள் இராசதுரை சுதாகரன் பெண் போதினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார். பின்னர் இராசதுரை சுதாகரனும் பெண் போதினியும் பிரசித்த நொத்தாரிசு மா.கஜப்பிரியா முகதாவில் 30.10.2015 ஆம் திகதியிடப்பட்ட 93 இலக்க உறுதி மூலம் பொன்னம்பலம் குலசிங்கத்திற்கும் பெண் ஆனந்ததேவிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி. வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை "ஆழ்வான் வளவு" உறுதிப்படி நிலப்பரப்பு 1 1/2. ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களால் 14.10.2015 ஆம் திகதிய 2833 இலக்கத்தில் அளந்து தயாரித்த படத்தில் துண்டு 01 எனச் சுட்டப்பட்டு நிலப்பரப்பு 2 குளி 2 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை

கிழக்கு:- கஜிந்தன் சிவதர்சினியின் ஆதனம்.

வடக்கு:- கோவிந்தசாமி பரமசிவம் பெண் நவநீதரத்தினத்தின் ஆதனம்.

மேற்கு:- ஒழுங்கையும் கோவிந்தசாமி பரமசிவம் பெண் நவநீதரத்தினத்தின் ஆதனம்.

தெற்கு:- பாவனி ரங்கநாதனின் ஆதனம்.

தற்போது பொன்னம்பலம் குலசிங்கமும் பெண் ஆனந்ததேவியும் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பொன்னம்பலம் குலசிங்கமும் பெண் ஆனந்ததேவியும் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்மானுவல் ஆனல்ட்,
முதல்வர்,
மாநகர சபை.

(C-6676)

# கல்யாணமாலை


## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 22 ½ செவ் 4 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L, France<br>எதிர்பார்ப்பு:A/Lபடித்தபெண். (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/9779 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 60 சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசஉத்தியோகம் (உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: G/5322 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:BCMA, Senior Financial Analyst, Canada<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,(உள்நாடு,வெளிநாடு)<br>தொ.இ: B/9780 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா: 7 ¼ செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:B.Sc Following, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/5339 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 27 ½ செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L,NVQ, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: A/L,உத்தியோகம் (உள்நாடு)<br>தொ.இ: B/9782 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி 4<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: கனடாமட்டும்<br>தொ.இ: G/5352 |
| பிறப்பு: 1988கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 5'8" செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:A/L,முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/ 9784 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 23 ¾ செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L, NCICT, முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5357 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# ஆனி மாத இராசி பலன்கள்

## 16.06.2019- 16.07.2019



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு சூரியன், புதன், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கின்றன. தன ஸ்தானத்தில் சுக்கிரன் பலம் பெற்றிருக்கிறார். குருவினுடைய பார்வை தன ஸ்தானத்தில் பதிகிறது. 9 ஆம் இடத்தில் சனி வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். அவரோடு கேதுவும் இருக்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆனி மாதப் பிறப்பு நடைபெறுகிறது.

பொருளாதாரத்தை போதுமான அளவு வழங்கும் தன ஸ்தானம் வலுவடைந்து இருப்பதால் பணக்கவலைகள் அகலும். தேவைப்பட்ட நேரத்தில் பணம் கைக்கு வந்துசேரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்ட நேரத்தில் செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் நீண்ட நாட்களாக நடைபெறாத சுபகாரியங்கள் இப்பொழுது நடைபெறும். முன்னேற்றம் காணும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமாகவே விளங்குகிறது.

'அஷ்டமத்தில் குரு இருக்கிறாரே' என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். அந்த குரு பகவான் இப்பொழுது வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை ஏற்பட்டாலும் அது உடனடியாக சரியாகிவிடும். அதேநேரத்தில் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் தொழிலில் கொஞ்சம் கவனம் தேவை. குறிப்பாக முக்கிய பொறுப்புகளை யாரிடமேனும் நீங்கள் ஒப்படைத்தால் அது சிறப்பாக நடைபெறாது. மீண்டும் உங்களிடமே வந்து சேரும்.

உங்களுக்கு இந்த மாதம் நன்மை நடைபெற வேண்டுமானால், குரு மற்றும் சனி ஆகிய இரண்டு கிரகங்களையும் தொடர்ந்து வழிபட்டு வர வேண்டும். மேலும் இந்த ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திரம் அன்று சிவபுராணம் பாடி நடராஜப் பெருமானை வழிபட்டால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 24 ஆம் திகதி கடக இராசிக்கு செல்லும் செவ்வாய், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். அவர் நீச்சம் பெறும் இந்த நேரம் நன்மைகளே அதிகம் நடைபெறும். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றம்,

## நல்லது நடக்கும்

உத்தியோக மாற்றம் போன்றவற்றை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும். 'உத்தியோகத்திற்கு பல நாட்களாக முயற்சி செய்தும் அது கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்போது நல்ல வேலை கிடைக்க வழி ஏற்படும்.

புதன் வக்கிர காலம்

ஜூன் 24 ஆம் திகதி முதல் ஜூலை 14 ஆம் திகதி வரை, புதன் வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் வக்கிரமடையும் பொழுது, உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக் குறையலாம். பஞ்சாயத்துக்கள் முடிவடையாமல் நீடிக்கலாம். உத்தியோகத்தில் சக




பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையும். 'மாற்று உத்தியோகம் திருப்தியாக இல்லையே, மீண்டும் பழைய உத்தியோகம் பார்க்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். இந்த நேரத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாயை, குரு பார்ப்பதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும்.

மிதுன சுக்கிரன் சஞ்சாரம்

ஜூன் 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். தன சப்தமாதிபதி சகாய ஸ்தானத்திற்கு செல்லும்பொழுது திருமண முயற்சிகைகூடலாம். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களின் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவற்றிற்கு செய்த முயற்சிகள் கைகூடும். இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், ஆறுமுகப்பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும் மாதம் இது. உங்கள் இராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்திருப்பதால், பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். தொழில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். சகோதரர்கள் மாதத்தின் முற்பகுதியில் ஒத்துழைப்புக் கொடுப்பர். பிற்பகுதியில் பிரச்சினைகளை உருவாக்கலாம். கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பிரச்சினையில் இருந்த பதவி உயர்வு வந்து சேரும். சலுகைகளும் கிடைக்கும். வீடு, வாகனம்வாங்கும்யோகம் உண்டு. நந்தி வழிபாடும், நடராஜப் பெருமான் வழிபாடும் நன்மையைத் தரும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விகாரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் உங்கள் இராசியிலேயே பலம்பெற்றுச் சஞ்சரிக்கிறார். அவரைக் குரு பகவான் பார்க்கிறார். குரு-சுக்கிரன் பார்வை விபரீத இராஜ யோக அடிப்படையில் செயற்படப் போகிறது. திட்டமிடாமல் செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம். பொருளாதார முன்னேற்றம் உச்சத்திற்குச் செல்லும். தன ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. மேலும் தனாதிபதி புதன் சொந்த வீட்டில் வலிமைபெற்று யோகாதிபதி சனியால் பார்க்கப்படுகிறார். எனவே வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கூட்டு முயற்சிகளில் இலாபம்கிடைக்கும்.

குடும்ப ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், ராகு ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. குடும்ப முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த சுப நிகழ்ச்சிகள் இப்பொழுது தானாக நடைபெறும். கடைத் திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழா, கல்யாணம், காதுகுத்து என்று ஒவ்வொரு காரியங்களும் துரிதமாக நடைபெறும். அரசியல்செல்வாக்கு மேலோங்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். சொத்து வாங்கும் யோகம் வாய்க்கும்.

'அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கின்றதே' என்று கவலைப்பட வேண்டாம். எல்லாவற்றிற்கும் பரிகாரங்கள் இருக்கிறது. கிரகங்களின் இயக்கம் கடுமையாக இருக்கும் பொழுது, அதற்குரிய தெய்வங்களை வழிபட்டால் அதன் கடுமை குறைவதோடு, உங்கள் கவலைகளும் தீரும். எனவே தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தளரவிட வேண்டாம். ஒவ்வொரு சனிக்கிழமையும் விநாயகப் பெருமானையும் சனி பகவானையும் அனுமனையும் தொடர்ந்து வழிபட்டு வருவது நல்லது. சனி கவசம் படித்தால் காரியங்களில் வெற்றியாகும்.

இம்மாதம் நடராஜர் தரிசனம் வருவதால் அன்றைய தினம் சிவபுராணம் பாடி, நடராஜப் பெருமானை வழிபட்டு வந்தால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

கடகச் செவ்வாய் சஞ்சாரம்


ஜூன் 24 ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அங்கு அவர் நீச்சம் பெறுவதால் உங்களுக்கு அதிக நன்மை கிடைக்கும். உங்கள் இராசியைப் பொறுத்

## ஆரோக்கியம் சீராகும்

தவரை, விரயாதிபதியாகவும் சப்தமாதிபதியாகவும் விளங்குபவர் செவ்வாய். விரயாதிபதி நீச்சம் பெறுவதால் விரயங்கள் அதிகரிக்கும். சப்தமாதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே கொஞ்சம் அனுசரித்துச் செல்லுங்கள். கோபத்தைக் குறைத்துக் கொள்வது மட்டுமல்லாமல், உடன் இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பதும் நல்லது.

புதன் வக்கிர காலம்

ஜூன் 24 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் வக்கிரம் பெறுகிறார். ஜூலை 14 ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாகிறார். இந்த வக்கிர காலத்தில் உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. கொடுக்கல்-வாங்கலிலும் கொஞ்சம் கவனம் தேவை. பிறருக்கு பணப்பொறுப்பு சொல்வதன் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம். பிள்ளைகள் வழியிலும் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பிள்ளைகளை




உங்கள் பேரும்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். வெளியூரில் வசிக்கும் பிள்ளைகளாக இருந்தால் அவர்கள் முன்னேற்றத்தை தொலைபேசி வாயிலாகக்கேட்டு அறிந்துகொள்வது நல்லது.

மிதுனச் சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் சுக்கிரன், தன ஸ்தானத்திற்கு ஜூன் 29 ஆம் திகதி வருகிறார். அங்குள்ள சூரியனோடு அவர் சேர்வதால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரலாம். 6-இற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் உத்தியோகத்தில் மாற்றம் அல்லது உத்தியோகத்தில் உயர்வு ஒரு சிலருக்கு வரலாம். வேலைவாய்ப்பைத் தேடி பலமுறை முயற்சி செய்தும் இதுவரை கிடைக்காதவர்களுக்கு இப்பொழுது பொருத்தமான வேலை அமையும். அதேநேரத்தில் அஷ்டமத்துச் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் வாய்த்த வேலையை தக்க வைத்துக் கொள்வது அரிது. இருப்பினும் சுய ஜாதகத்தையும் ஒருமுறை புரட்டிப் பாருங்கள். திசாபுத்தி பலம் இழந்திருப்பவர்கள் அதற்குரிய தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளலாம். குறிப்பாகப் பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். வழக்குகள் சாதகமாக அமையும்.

இம்மாதம் ராகு- கேதுக்களை வழிபடுவதோடு நாகசாந்திப் பரிகாரங்களையும் மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் விரயத்திற்கேற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள், இப்பொழுது துரிதமாக நடைபெறும். கணவன் - மனைவிக்குள் அன்பும், பாசமும் பெருகும். உறவினர் பகை அகல எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கும். பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் வராமல் பார்த்துக்கொள்வது நல்லது. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. தாய்வழி அனுகூலமும், சகோதர வர்க்கத்தினரால் தொழில் முன்னேற்றமும் ஏற்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வரும். பணி புரியும் பெண்களுக்கு பல நாட்களாக நினைத்த பதவி உயர்வு கிடைக்கும். பொருளாதார நிலை சிறப்பாக அமைய, நடராஜப் பெருமான் வழிபாட்டையும், லட்சுமி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

### நாடாளுமன்றத்தை உடன் கலைக்க வேண்டும்

# மகிந்தவின் கருத்தை நூற்றுக்கு நூறு வீதம் ஆமோதிக்கும் முன்னாள் முதலமைச்சர் நஷீர்

நாட்டில் தற்போது தொடர்ந்து பெருகும் முரண்பாடுகளைக் தவிர்க்கவும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை நீக்கவும் உடனே நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்ல அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்தை நான் நூற்றுக்கு நூறு வீதம் ஆமோதிக்கிறேன் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

அவரது அக்கருத்தை நான் பத்திரிகையில் பார்த்தேன். அவரது இக்கருத்தை நான் நூற்றுக்கு நூறு வீதம் ஆமோதிக்கிறேன்.


அத்தோடு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்,

நாட்டில் தற்போது தோன்றியுள்ள விடயங்களுக்கு தீர்வுகான மக்கள் அரங்கிற்கு செல்வதே முக்கியமானதாகும். எனவே அரசு நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

அதற்கும் முடியாவிட்டால். விகிதாசார தேர்தல் முறைமையின்படி மாகாண சபைத் தேர்தலையாவது நடத்தி மக்களின் கருத்தைத் தெரிந்து கொள் வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துவதற்கு நாடாளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை தாக்கல் செய்து நிறைவேற்றுவதன் மூலமாக இரண்டு வாரங்களில் தேர்தலுக்கு செல்ல முடியும். இன்று நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக இருப்பது ஜனநாயக முறைமையிலான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு தேர்



தல்கள் காலதாமதப்படுத்தப்படுவதாகும்.

இன்று நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. பங்குச் சந்தை பாரிய பின்னடைவைக் கண்டு வருகின்றது.

இந்நிலை தொடருமானால் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க நேரும். இந் நிலையை நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொண்டு மாற்றியமைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அம்பன் பிரதேச வைத்தியசாலையில் சேவை பெறுவதில் பொதுமக்கள் சிரமம்

அம்பன் பிரதேச வைத்தியசாலையில் இரவு நேரத்தில் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வைத்தியர் இல்லை என பொது மக்கள் குற்றம்சாட்டினர்.

மருதங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பன் வைத்தியசாலை நாகர் கோயில், அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பொது மக்களின் சுகாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் ஓர் பிரதேச வைத்தியசாலையாக அமைந்துள்ளது.

இந் நிலையில் குறித்த வைத்தியசாலைக்கு இரவு நேரங்களில் நோயாளர்கள் செல்லும் போது சில வேளைகளில் வைத்தியர் கடமையில் இல்லாத சூழ்நிலை காணப்படுவதாக அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டினர்.

குறித்த விடயம் தொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரியிடம் தொடர்பு கொண்ட போது, அம்பன் பிரதேச வைத்தியசாலை தொடர்பான முறைப்பாடு தமக்கும் கிடைத்ததாகவும் இது தொடர்பில் குறித்த வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு மேலதிக நடவடிக்கைமேற் கொள்வதாகத் தெரிவித்தார். (இ-10)

# குண்டுத் தாக்குதல் அசம்பாவிதங்களின் பின் சுற்றுலாத்துறை மிக மோசமாகப் பாதிப்பு

## சுற்றுலாத்துறை ஒன்றிய நிறுவகத் தலைவர் சுட்டிக்காட்டு

21.04.2019 இல் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் பின்னர் நாட்டின் மிகையாக வளர்ந்து வந்த சுற்றுலாத்துறை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. இதனால் வாகன ஓட்டுநர்கள் முதல் பெரிய நட்சத்திர விடுதிகளின் உரிமையாளர்கள் வரை பெரும் பாதிப்பிற்கும் கஷ்டத்திற்கும் உள்ளாகியுள்ளனர். இதனால் இவர்களின் அன்றாட வாழ்க்கையும் பாதிப்படைந்து தொழில்களைச் செய்வதற்கு பெரும் கஷ்டங்களின் மத்தியில் வாழ்கின்றனர் என வட மாகாண சுற்றுலாத்துறை ஒன்றிய நிறுவகத் தலைவர் தி. சுந்தரேசன் தெரிவித்தார்.

இதனைக்கருத்தில்கொண்டு அரசாங்கம், சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து நிதி அமைச்சின் ஊடாக பல சலுகைகளைச் சுற்றுலாத்துறைக்கு வழங்கி வருகிறது. எனினும் தனிப்பட்ட பிரச்சினைகள் இருப்பின் என்னிடமோ அல்லது கீழ் தரப்படும் சுற்றுலா அபிவிருத்தித்துறையின் உத்தியோகத்தரிடமோ தொடர்பு கொண்டு உங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

• பெறுமதி சேர்வரி (VAT) 15% வீதத்தில் இருந்து 5% வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

• வங்கிக் கடன்கள் இருப்பின் அவை பங்குனி 2020 வரை ஒத்திவைக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

• என்டபிறைஸ் ஸ்ரீ லங்கா (Enterprise Sri Lanka) மூலமாக தொழில் நடத்துவதற்கான மூலதனம் (Working Capital) கடன் வசதியை வருடாந்த வட்டியாக 3.47% வீதத்திற்கு தரப்படுகின்றது.

• RDB வங்கி ஊடாக 5 இலட்சம் ரூபாய் மூன்று வருடத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு கடன் தரப்படுகின்து.

• மேலும் சுற்றுலாத்துறை சார் தொழிலாளர்களுக்கு அவர்களின் தேவைகள் அறிந்து உதவி செய்ய ஆவன செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக தொழிலாளர்களின் கடன்கள் மற்றும் அவர்களின் ஊதியக் குறைவுகளை நிவர்த்தி செய்ய தேவைக்கு ஏற்ப வங்கிகள் மூலம் செய்து தரப்பட்டுள்ளது. இதனை விட சுற்றுலாத்துறை சார்ந்தவர்களுக்கு வேறு பிரச்சினைகள் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படுமாயின் தி.சுந்தரேசன் நிறுவகத் தலைவர், வட மாகாண சுற்றுலாத்துறை, இல.51, அம்மன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம், தொலைபேசி - 075 936 0370 ,காவிந்த இலங்கை சுற்றுலாச் சபை தொலைபேசி- 071 573 9539 ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு-இவற்றிற்கு அடிப்படை அத்தியாவசியமாக இலங்கை சுற்றுலாத்துறையின் அங்கத்துவம் இருக்க வேண்டும். இல்லாவிடினும் அவற்றைத் துரிதமாக சிக்கல்கள் இன்றி மூன்று நாட்களில் செய்து தரவும் ஆவன செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குறை'களை' பதிகம் 42

## தாலிகட்டலில் சுந்தரரைத் தடுத்த வேதியர் போல் வீடியோக்காரர்

நாள் பார்த்து
நல்லநேரம் பார்த்து
பன்னிரு மாதங்களில்
மூசுபனி கொட்டும் மாசியும்
சிறுமாரிச் சோளகத்துச் சித்திரையும்
அலைச்சல்தரும் ஆடியும்
பிதிரர் வந்துபோகும் புரட்டாதியும்
மாரி காலத்து மார்கழியும்- கடந்து போக
நல்மாதமும் சுபநாள் நட்சத்திரமும்
நல்ல திருமண மண்டபமும்
ஒன்றாய் கூடி ஒருமித்தே
மங்கள நாண்பூட்டும்
மணநாள் ஏற்பாடாயிற்று

வாழை மகர தோரணம்
மங்கள வாத்தியம்
மற்றும் வேதயாகம்
ஊர் உறவெல்லாம் கூடி
வாழவைக்கும் வசந்தத்தை
வரவேற்று நிற்கையிலே
வீடியோ பிடிப்பவர்
சுந்தரர் திருமணத்தில் வந்து நின்ற
கிழவேதியர் போல
தாலிகட்டும் அத்தருணம் பார்த்து
நிறுத்து என்பார் நீசர்கள்
ஒரு நுட்பமும் அறியாப் படப்பிடிப்பாளர்
சனத்தைச் சிலையாக்கி
படம்பிடித்து அல்பம் செய்து
பணம் உழைக்கும்
பாவச்செயல் செய்கிறார்
இயல்பாய், இயற்கையாய், இனிமையாய்
இது அது என்று ஏதும் சொல்லாமல்
பக்குவமாய்க் காட்சியைப் படம்பிடிப்பதே
வீடியோ தொழில்நுட்பமாம்

இஃதென்னென்றால் நில்; நிறுத்து
நிமிர்ந்துகொள்; நேரே பார்
பொறுமையாய் இரு என்றெல்லாம் கூறி
வளமாய் வந்த சுபநேரத்தை கைநழுவிவிட்டு
இராகு காலத்தில் மரணயோகத்தில்
தாலிகட்டக் காரணமாய் இருக்கும்
வீடியோ வேண்டாம்
என்றுரைக்க எம்மில் யாருளர்
சுபநேரம் பார்க்கும் மக்காள்
வீடியோக்காரர்களிலும்
சகுனம் பிழைத்தவர் வேண்டாம்
என்று துணிவோடு உரைமின்
ஆயிரம் காலத்துப் பயிர்
ஆனந்தமாய் வாழும்
இதுவே உபாயம் சொன்னோம்
அபாயம் ஒருநாளும் இல்லை

கூத்தனார்

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# இந்தியத் தேர்தல் முடிவும் தெற்காசிய அரசியல் தாக்கமும் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இந்தியத் தேர்தல் முடிவும் தெற்காசிய அரசியலில் அதன் தாக்கமும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (பௌர்ணமி தினம்) பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரி யில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் பிரதான உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆற்றுவார்.

இவ் உரையைத் தொடர்ந்து இடம்பெறும் கலந்துரையாடல் அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)

# புதுக்குடியிருப்பு சுனாமி நினைவாலயத்தை பிரதேச சபையின் கீழ் கொண்டுவர தீர்மானம்

புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தினை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் கொண்டு வருவதற்கான தீர்மானம் 18 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.



புதுக்குடியிருப்பு பிரதேச சபையின்மாதாந்ம அமர்வு நேற்று தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்றது. அதன்போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த 2004 ஆம்ஆண்டு ஆழிப்பேரலையினால் காவு கொள்ளப்பட்ட மக்களை புதைத்த இடம் சுனாமி நினைவாலயமாக பிரகடனம் செய்யப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.

குறித்த இடத்தினை பிரதேச சபை தனது ஆளுகைக்குள் கொண்டு வந்து புனிதப்பகுதியாக பேணி பாதுகாக்கவேண்டும் என்ற பிரேரணையினை புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன் அமர்வின் போது முன்வைத்தார்.

அதாவது, மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் பிரதேச சபையின் சட்ட திட்டத்திற்கு அமைவா கவும் பார்க்கின்றபொழுது இந்த இடம் பிரதேச பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோன்று முள்ளியவளை கஜட்டையடி பகுதியில் சுனாமியால் உயிரிழந்தவர்களை புதைத்த இடமும் முல்லைத்தீவு பிரதேச சபையின் கீழ்கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள சுனாமி நினைவாலயத்தினை பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் எனத்தெரிவித்தார்.

எனவே குறித்த விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தவிசாளர் உட்பட 18 உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளதுடன் ஆ.ஜோன்சன் மற்றும் இ.சத்தியசீலன் ஆகிய இரண்டு பேரும் நடுநிலை வகித்தனர். அந்த வகையில் குறி த்த பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான மேற்கொண்டான தீர்மானத்தின் அறிக்கையினை பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளதாக சபையில் தீர்மானிக்கப்பட்டது. (9-281)

# மன்னார் மாவட்டத்தில் கடும் வறட்சி 60 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிப்பு

கடுமையான வறட்சிகாரணமாக மன்னார் மாவட்டம் முழுவதும் குளங்கள் மற்றும் வாய்க்கால், நீர் நிலைகள் என அனைத்தும் வற்றிய நிலையில் காணப்படுவதனால் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள 104 கிராம சேவையாளர் பிரிவுகள் முழுமையாக பாதிப்படைந்துள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப்பணிப்பாளர் கனகரெட்ணம் திலீபன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக அதிகரித்த வெப்பதால் ஏற்பட்ட வறட்சிகாரணமாக மன்னார், மடு, மாந்தை, முசலி, நானாட்டான் ஆகிய பிரதேசங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக நானாட்டான் முசலி பிரதேசங்களை சேர்ந்தவர்களே அதிகம் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மன்னார் மாவ ட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் மன்னார் மாவட்டம் முழுவதிலும் 17 ஆயிரத்து 984 குடும்பங்களை சேர்ந்த 62 ஆயிரத்து 823 குடும்ப அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிவாரண பிரிவினரால் இவர்களுக்கான தற்காலிக குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மூன்று பவுசர்கள் மூலமும் 9 சாதாரண பவுசர்கள் மூலமும் தற்காலிகமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இவ் வறட்சியால் பாதிக்கப்பட்ட 8 ஆயிரத்து 860 குடும்பங்களை சேர்ந்த 31 ஆயிரத்து 280 அங்கத்தவர்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. ஒரு நாளைக்கு சுமார் ஒரு லட்சத்து 45ஆயிரம் லீற்றர் தண்ணீர் வழங்கப்படுகிறது.

மேலும் பெரும்பாலான சிறிய குளங்கள் நீர் அற்ற நிலையிலும் நடுத்தர குளங்களான அகத்திமுறிப்பு, கூராய் போன்ற குளங்கள் மிகவும் குறுகிய நீரை கொண்டதாகவும் காணப்படுகின்றது. குறித்த வறட்சி நிலைமையானது தொடர்ந்து காணப்படும் பட்சத்தில் நடுத்தரகுளங்களிலும் நீர் அற்ற நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அத்துடன் இவ் வறட்சி நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேண்டுகோள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களை போன்று இந்த வருடமும் வறட்சியால் பாதிக்கப்பட்ட குறித்த மக்களுக்கு உதவித்திட்டம் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# திறன் வகுப்பறை திறப்பு



(குருமன்காடு)

வவுனியா கூமாங்குளம் சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை (ஸ்மாட் கிளாஸ் றூம்) திறந்து வைக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ். பாலச்சந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டு திறன் வகுப்பறையை திறந்து வைத்தார். அத்துடன் இந்த நிகழ்வில் மாணவத் தலைவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினரால் சின்னம் சூட்டும் நிகழ்வும் நடைபெற்றது. (9-250)



முல்லைத்தீவு முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தின் திருப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மூலஸ்தானம் சங்குஸ்தாபன அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஆலய நிர்வாகத்தின் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவானாகிய க.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன், முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் உட்பட பக்தர்கள் கலந்து கொண்டு மூலஸ்தானம் அமைப் பதற்கு அடிக்கல்லை நாட்டிவைத்தனர். (9-281)

# நிர்வாக தெரிவுக் கூட்டம்

முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு கூட்டம் நேற்று இடம் பெற்றது. முள்ளி வாய்க்கால் கிழக்கு கிராம சேவையாளர் தலைமையில் ஆரம் பமாகிய இந்த நிர்வாகத்தெரிவு கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். இதில் தலைவராக ந.சிதம்பரப்பிள்ளை, செயலாளர் ப.செந்தூரன்.பொருளாளர் பா.மயூரன் மற்றும் போசகர் உள்ளிட்ட 7 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது அதிகம் பாதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவுள்ளன. இதற்கு கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம் என கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (9-281)

# தமிழன் குண்டுகள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பொக்கணைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் இரண்டு தமிழன் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொக்கணைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை உரிமையாளர் காணியினை துப்புரவு செய்துகொண்டிருக்கும் போது நிலத்தில் புதையுண்ட நிலையில் இரண்டு தமிழன் குண்டுகள் காணப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அவர்கள் குறித்த இடத்தில் உள்ள தமிழன் குண்டினை அடையாளப்படுத்தி நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக அதனை நேற்று அகற்றியுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (9-281)

# சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக கிளிநொச்சியில் போராட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளைப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பழைய ஊரியான், கோரக்கன் கட்டு, ஐயன்கோவிலடி ஆகிய பிரதேசங்களில் பொலிஸாரின் துணையுடன்இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுகளை தடுத்து நிறுத்தக்கோரி கவனயீர்ப்புப்போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பழையஊரியான், கோரக்கன் கட்டு போன்ற பகுதிகளில் தொடர்ச்சியாக விவசாய நிலங்களிலும் ஆற்றுப்படுக்கைகளிலும் பெருமளவான மணல் சட்டவிரோதமான முறையில் அகழப்பட்டு இரவு வேளைகளில் 15 இற்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறு மணல் அகழ்வுகள் தொடர்பில் பிரதேச மக்களால் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்ற போதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இரவு வேளைகளில் டிப்பர் வாகனங்களில் ஏற்றப்படும் மணல் சில பொலிஸ் அதிகாரிகளின் துணையுடன் கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப்பிரதேசத்தில் இருக்கின்ற நூற்றுக்கும் மேற்பட்ட வீட்டுத்திட்டப்பயனாளிகள் பிரதேச செயலக அனுமதியுடன் மாத்திரமே மாதத்தில் ஒரு லோட் மணலை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஆனால், நாளொன்றுக்கு பதினைந்திற்கும் மேற்பட்ட டிப்பர்வாகனங்கள் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வுகளில் ஈடுபடுகின்றன.

இவ்வாறு பொலிஸாரின் துணையுடன் இடம்பெறுகின்ற மணல்அகழ்வுகளை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கோரியபோதும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் பிரதேச மக்களும் வீட்டுத்திட்டப் பயனாளிகளும் கிராம மட்ட அமைப்புக்களும் இணைந்து பொலிஸார் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு எதிராக கவனயீர்ப்புப்போராடடம் ஒன்றினை விரைவில் முன்னெடுக்கவுள்ளனர். (9-315)





# முல்லை.பொசன் கண்காட்சி

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகம் ஏற்பாடு செய் துள்ள மாபெரும் பொசன் வெளிச்சக்கூடு கண்காட்சி 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மாலை முல்லைத்தீவு பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சித்திர கலையம்சங்களுடனான பொசன் வெளிச்சக்கூடுகள் தயாரிக்கப்பட்டு கண்காட்சிக்காக வைக்கப்படுவதுடன் விசேட தானசாலைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். (9-281)

# இலங்கையை யாரும் உரிமை கோர முடியாது

## இனவாதம், மதவாதம் ஒழிக்கப்பட வேண்டும்-பா.உ. அத்துரலிய ரத்னதேரர்



இலங்கை ஒரு தனிநாடு. அதை யாரும் உரிமை கோர முடியாது. இங்கு அனைவருக்கும் சமமான சட்டம் தான் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் நேற்று வவுனியாவிற்கு விஜயம் செய்து அங்குள்ள சில பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள் எனப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

வவுனியா, தவசியாகுளம் சேவாலங்கா கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஒரு நாடு. அதை யாரும் உரிமை கொண்டாட முடியாது. இங்கு எல்லோருக்கும் ஒரே சட்டம் தான். முஸ்லிம் மக்களுக்கு என தனியான பகுதியோ, சட்டமோ இல்லை. இந்த நாட்டில் இனவாதம், மதவாதம், அடிப்படைவாதம் என்பன ஒழிக்கப்பட வேண்டும். அதற்கு இணைந்து பணியாற்ற அனைவரும் முன்வர வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையைத் தொடர்ந்து எதிர்காலத்தில் எவ்வாறு தமிழ் - சிங்கள- முஸ்லிம் மக்கள் இணைந்து செயற்படுவது என்பது குறித்தும், எதிர்காலத்தில் நாட்டை அபிவிருத்தி நோக்கி நகர்த்துவதற்கும் ஏற்ற வகையில் குழுவாக இணைந்து செயற்படும் நோக்கிலும் வடக்கிற்கிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளோன். எதிர்காலத்தில் இணைந்து பணியாற்றுவோம் என மேலும் தெரிவித்தார். (9-250)

# வாணிமோட்டை குளத்தின் கீழான காணிகளை வனவள திணைக்களத்தினர் விடுவிக்காததால்

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு காணி வழங்குவதில் தாமதம்

### துணுக்காய் பிரதேச செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் வாணிமோட்டைக் குளத்தின் கீழான காணிகள் இதுவரை வனவளத்திணைக்களத்தினால் விடுவிக்கப்படாததால் அவற்றை பகிர்ந்தளிப்பதில் காலதாமதங்கள் ஏற்படுவதாக துணுக்காய் பிரதேச செயலாளர் கு. பிரபாகரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் 1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வாணிமோட்டைக்குளத்தினை புனரமைத்து அதன் கீழான காணிகளை தமக்குப்பகிர்ந்தளிக்குமாறு பிரதேச மக்கள் கோரியிருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஆண்டு இக்குளம் முழுமையாகப்புனரமைக்கப்பட்டுள்ளபோதும் இதன் கீழான காணிகள் இதுவரை பகிர்ந்தளிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தில் காணிகளற்ற குடும்பங்கள் தமது வாழ்வாதாரப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு இக்காணிகளை பகிர்ந்தளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலரை தொடர்பு கொண்டு கேட்டபோது, இக்குளமானது 1983 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டு தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.


இதன் கீழுள்ள காணிகள் வனவளத்திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளாக இருப்பதனால் குறித்த திணைக்களத்திடம் இருந்து காணிகளை விடுவிப்பதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன.

இந்தப்பிரதேசத்தில் காணிகளற்ற 25 குடும்பங்களுக்கு குடியிருப்புக்காக அரை ஏக்கர் வீதமும் பயிர்ச்செய்கைகளுக்காக ஒரு ஏக்கருமாக ஒன்றரை ஏக்கர் காணிகளை வழங்கி அவற்றில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடுகளை அமைப்பதற்கும் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம்.

வனவளத்திணைக்களத்திடம் இருந்து இக்காணிகளை விடுவித்து இந்தப்பிரதேசத்தில் காணியற்றவர்களுக்கு விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-315)




# வவுனியாவில் கடும் காற்று வீடுகள் சேதம்



வவுனியாவில் கடந்த சில நாட்களாக வீசி வரும் கடும் காற்று காரணமாக இரண்டு வீடுகள் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடந்த சில நாட்களாக கடும் காற்று வீசி வருகின்றது. இக் காற்றின் தாக்கத்தால் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மகாமகிழங்குளம் மற்றும் பிரப்பமடு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இரண்டு வீடுகளின் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளன.

மகாமகிழங்குளம் பகுதியில் ஒரு வீட்டின் கூரை காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளது. இதனால் அவ் வீட்டில் வசித்து வந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 2 பேரும், பிரப்பமடுவில் ஒரு வீட்டின் சீற் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டமையால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களுக்கான இழப்பீட்டினை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் தெரிவித்துள்ளது. (9-250)

# மாவட்ட பணிமனை திறப்பு விழா

ஈழப் புரட்சி அமைப்பின் (ஈரோஸ்-EROS) முல்லைத்தீவு மாவட்ட பணிமனை திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு சிலாவத்தை, 47, மாதிரிக் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கிளைத் தலைவர் தோழர் ஐயா மணியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 813 2583 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள

# துணுக்காய் பிரதேசத்துக்கு குடிநீர் வழங்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக குடிநீர் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலகத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

துணுக்காய் பிரதேசத்தில் வரட்சி நிலவும் கிராமங்களுக்கான குடிநீரை விநியோகிக்குமாறு கிராம அலுவலர் ஊடாக பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஐயன்கன்குளம், அனிஞ்சியன்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், உயிலங்குளம், ஆலங்குளம் போன்ற கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# கைக்குண்டுகள் மீட்பு

வவுனியா, வேலங்குளம் பகுதியில் உள்ள தோட்டக் காணியிலிருந்து கைக்குண்டுகளை பூவரசங்குளம் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வவுனியா வேலங்குளம் பகுதியில் உள்ள தனியார் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். பண்படுத்தப்பட்ட குறித்த காணியில் உரப்பொதியில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்த பூவரசங்குளம் பொலிசார் குறித்த உரப் பொதியை சோதனை செய்து பார்த்தபோது ஐந்து கைக் குண்டுகள் இருப்பதை அவதானித்துள்ளனர். பின்னர் விசேட அதிரடிப்படையினருக்கு தக்வல் வழங்கியதையடுத்து நேற்று குண்டுகளை மீட்டு செயலிழக்க வைத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (9-250)



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் கற்றல் உபகரணங்களும் முல்லைத்தீவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு ஒரு தொகை உலர் உணவுப்பொருட்கள் என்பன வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் அன்பளிப்பாக கடந்த வாரம் வழங்கப்பட்டது.

# சுகாதார அமைச்சருக்கு எதிராக வைத்தியர்கள் போராட்டம்



(மன்னார்)

சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்னவிற்கு எதிராக மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை முன்றலில் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வடக்கிற்கு வைத்தியர்கள் வேண்டாமா?, நீரிழிவு நோய்க்கு தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம்., ராஜித வேண்டாம், புற்றுநோய்க்கு தரம் குறைந்த மருந்துகள் வேண்டாம், எமக்கு எல்லாம் நாறல் மருந்து, ராஜிதவிற்கு சிங்கப்பூரில் சிகிச்சையா? உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட மும்மொழி பதாதைகளுடன் வைத்தியர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# பாரதம்

## பீகாரில் மூளைக்காய்ச்சலால் 43 குழந்தைகள் பரிதாபமாகப் பலி

(பாட்னா)

பீகார் மாநிலம் முசாபர்பூர் மாவட்டத்தில் மூளைக்காய்ச்சலுக்கு 43 குழந்தைகள் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து நிலைமையை ஆராய்வதற்காக மத்திய நிபுணர் குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பீகார் மாநிலத்தில் குழந்தைகளை தாக்கும் மூளைக்காய்ச்சல் நோய் பரவி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து அங்கு நோய் பரவியது.

இதில் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 11 பேர் உயிரிழந்திருந்தனர். ஆனால் இப்போது திடீரென இதன் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. நேற்று காலை வரை 41 குழந்தைகள் பலியாகி இருந்தனர். அதன் பிறகு முசாபர்பூர் மாவட்டத்தில் மேலும் 2 குழந்தைகள் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது.

நோய் பாதிக்கப்பட்டு 117 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. முசாபர்பூர், கயா ஆகிய மாவட்டங்களில் நோய் தாக்கம் அதிக அளவில் உள்ளது.

'அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம்' மற்றும் 'ஜப்பான் என்சபிலிட்டிஸ்' என 2 வகையான மூளைக்காய்ச்சல் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் முசாபர்பூர் பகுதியில் அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம் மூளைக்காய்ச்சலும் கயா பகுதியில் ஜப்பான் என்சபிலிட்டிஸ் மூளைக்காய்ச்சலும் பரவி இருக்கிறது.

குழந்தைகள் அடுத்தடுத்து உயிரிழந்தது மக்களை பீதிக்குள்ளாக்கி இருக்கிறது. இதைத் தொடர்ந்து நிலைமையை ஆராய்வதற்காக மத்திய நிபுணர் குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று ஆய்வு நடத்துவதுடன் சிகிச்சைகளும் மேற்கொண்டு வருகிறார்கள்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (7)

## தண்ணீர்ப் பிரச்சினையை தீர்க்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை வேண்டும்




தமிழ்நாட்டில் தண்ணீர் பிரச்சினையை தீர்க்க போர்க்கால அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

திருச்சி விமானநிலையத்தில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "நீர்நிலைகளை தூர்வாராமல் இருந்ததே தண்ணீர் பிரச்சினைகள் ஏற்பட காரணம்.

மேகதாதுவில் அணைக் கட்டிவிட்டால் சென்னை உட்பட தமிழகத்தின் 19 மாவட்டங்களில் தண்ணீர் பிரச்சினை ஏற்படும்.

இவ்வாறான சூழலில் விவசாயிகள் வேறு வழியின்றி ஐதரோகாபன் போன்ற திட்டங்களை நிறைவேற்றும் தனியார் நிறுவனங்களிற்கு நிலங்களை விற்றுவிடுவார்கள்.

இதனை பயன்படுத்திக்கொண்டு இலட்சக்கணக்கான பணம் மத்திய அரசுக்குள்ளும் அதில் ஒரு பங்கு தனியார் நிறுவனங்களிற்கும் கிடைக்கும் என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## கடந்தகால வரலாற்றை உணர மத்திய அரசு தவறிவிட்டது

### ஸ்ராலின் குற்றச்சாட்டு



(சென்னை)

பிரதமர் நரேந்திர மோடி இரண்டாவது முறையாக பிரதமராக பதவியேற்றபின், புதிய கல்விக்கொள்கை என்ற பெயரில் மும்மொழி திட்டத்தை கொண்டுவர முயற்சித்துள்ளதாகவும், கடந்த கால தமிழக வரலாறு மற்றும் மாணவர்கள் நடத்திய போராட்டங்களை அவர்கள் உணர்ந்து பார்க்க தவறிவிட்டதாகவும், தி.மு.க தலைவர் மு.க ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், "மும்மொழி திட்டத்தை திணிக்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கு தி.மு.க எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் மும்மொழி திட்டத்தை திணிக்க முடியவில்லை.

நாடாளுமன்ற தேர்தலில் மகத்தான வெற்றியை பெற்றுள்ளோம். ஆனால் இதை பார்க்க கலைஞரும் இல்லை. அண்ணா ராமநாதனும் இல்லையே என்ற ஏக்கம் இருக்கிறது என மேலும் தெரிவித்துள்ளார். (7)

## ஆப்கானில் கடும் ...
## 40 தலிபான்கள் உயி...



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்துக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சமரில் 40 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்கும் முயற்சியில் இராணுவம் தீவிர முனைப்புக் காட்டி வருகிறது. தலிபான்களின் ஆதிக்கம் மிகுந்த

## சவுதி விமான நிலை...
## ஏவுகணைத் தா...

### 26 பேர் ப...

சவுதி விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 26 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஏமன் கிளர்ச்சியாளர்களினால் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த ஏவுகணைத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள சவுதி கூட்டுப் படை செய்தித் தொடர்பாளர் துருக்கி அல்-மாலிக்கி, சவுதி அரேபியாவின் அபா நகர விமான நிலையத்தில் ஏமனைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த தாக்குதலைத் தொடர்ந்து அபா நகரில் விமானப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (7)



## ஊடகவியலாளரின் கைது...
## நூற்றுக்கணக்கானோர்...

(மொஸ்கோ)

மொஸ்கோவில் ஊடகவியலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மேற்கொள்ளப்பட்ட பேரணி ஒன்றின் போது நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொஸ்கோவில் ஊழல் எதிர்ப்பு ஊடகவியலாளரான ஐவன் கொலுனோவை பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்தமைக்கு எதிராக குறித்த பேரணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பேரணியின் போது கைது செய்யப்பட்டவர்களில் பலர் ஊடகவியலாளர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மத்தியில் ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், மக்கள் எதிர்ப்பையடுத்து, கொலுனோவ் மீது சுமத்தப்பட்ட போதைப்பொருள் கடத்தல்



குற்றச்சாட்டு கைவிட... குறிப்பிடத்தக்கது.

## மோதல் ...யிரிழப்பு!

பகுதிகளில் இராணுவம் அதிரடி தாக்குதல்களை நடத்தி, பயங்கரவாதிகளை கொன்று குவித்து வருகிறது. அதேபோல் பயங்கரவாதிகளும் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்களை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் காபூல் மாகாணத்தில் டேசுபான் மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பு படை வீரர்களின் சோதனை சாவடி மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். அதனை தொடர்ந்து, பாதுகாப்பு படை வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர்.

இருதரப்புக்கும் இடையே நீண்ட நேரம் கடுமையான துப்பாக்கி சமர் நடந்தது. இறுதியில் தலிபான் இயக்கத்தின் தளபதி உட்பட பயங்கரவாதிகள் சுமார் 40 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். (7)

# உக்ரேய்ன் வைத்தியசாலையில் தீ; ஆறு பேர் உடல் கருகி உயிரிழப்பு!



(கீவ்)

உக்ரேய்னில் மனநல வைத்தியசாலையில் ஏற்பட்ட தீயின் கோரப்பிடியில் சிக்கி 6 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

உக்ரேய்ன் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள துறைமுக நகர் ஓடேசா. நாட்டின் 3 ஆவது மிகப்பெரிய நகரமான இங்கு அரசுக்கு சொந்தமான மனநல வைத்தியசாலை இயங்கி வருகிறது. 2 ஆம் உலகப்போர் மற்றும் ஆப்கானிஸ்தான் போரில் பங்கேற்று மனரீதியில் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மாலை இந்த வைத்தியசாலையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ, மேற்கூரை வழியாக பிற தளங்களுக்கும் பரவியது. இது குறித்து தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற 50 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர்.

ஆனால் அதற்குள் தீயின் கோரப்பிடியில் சிக்கி 6 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். (7)

## ...லையத்தில் ...ாக்குதல் ...படுகாயம்



# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் 72 பேர் படுகாயம்



(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 72 பேர் படுகாயமடைந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹொங்கொங்கின் சர்ச்சைக்குரிய நாடுகடத்தல் சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஹொங் கொங்கில் முக்கிய வழக்குகளில் கைது செய்யப்படுபவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங் கொங் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.


இதுகுறித்து ஹொங் கொங் நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற விவாதத்தின் போது மோதல் இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் தற்போது குறித்த உத்தேச கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹொங் கொங்கில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக கண்ணீர் புகை, ரப்பர் தோட்டாக்கள், மிளகு புகை போன்றவற்றை ஹொங் கொங் பொலிஸார் பயன்படுத்தியுள்ளனர்.

இதன்போது காயமடைந்த 72 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)

## ...துக்கு எதிர்ப்பு; ...ர் கைதாகினர்



...கவிடப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டிருந்தமை (7)

# காணாமல் போன இந்திய விமானம் பயணித்த 13 பேரும் உயிரிழப்பு

## விமானப்படை தகவல்

(இடாநகர்)

விபத்துக்குள்ளான ஏ.என்.32 ரக விமானத்தில் சென்ற 13 பேரில் ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லை என விமானப்படை உறுதி செய்துள்ளது.

இந்திய விமானப்படைக்கு சொந்தமான ஏ.என்.32 ரக விமானம் ஒன்று கடந்த 3ஆம் திகதி, 13 பேருடன் அசாமில் இருந்து புறப்பட்டது. அது கிளம்பிய அரைமணி நேரத்தில் அருணாச்சல பிரதேசத்தில் சீன எல்லையோரம் மாயமானது. இந்த விமானத்தை தேடும் பணிகள் உடனடியாக தொடங்கப்பட்டன.

இந்த தேடும் பணிகளில் விமானப்படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டன. இதேபோல் ராணுவம், இந்தோ-திபெத் படையினர் மற்றும் மாநில பொலிஸார், உள்ளூர் மக்களுடன் இணைந்து அருணாச்சல பிரதேசத்தின் சியாங் மாவட்டத்தை மையமாக கொண்டு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர். மோசமான வானிலை காரணமாக தேடுதல் பணியில் சிறிது தொய்வு ஏற்பட்டது.

இருப்பினும் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்றது. இதனிடையே கடந்த திங்களன்று அருணாச்சல பிரதேசத்தின், சியாங் மாவட்டத்தில் உள்ள கட்டி என்ற கிராமம் அருகே விமானத்தின் பாகங்கள் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. இதையடுத்து விமானத்தின் உதிரிப்பாகங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கு மீட்புக்குழுவினர் நேற்றுக்காலை சென்றனர்.

அப்போது விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் ஆய்வு செய்ததில் 13 பேரில் ஒருவர் கூட பிழைக்கவில்லை என விமானப்படை உறுதி செய்தது. 13 பேரும் உயிரிழந்திருக்கக்கூடும் என அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. (7)

# அமைதி நிறைந்த நாடுகள் பட்டியலில் 5 இடங்கள் கீழே இறங்கிய இந்தியா

உலகிலேயே அமைதி நிறைந்த நாடுகள் பட்டியலில் இந்தியா, 5 இடங்கள் கீழே இறங்கியுள்ளதாக ஆய்வின் தகவல் தெரிவிக்கின்றது. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தனியார் அமைப்பு ஒன்று நடப்பு ஆண்டுக்கான உலகிலேயே அமைதி நிறைந்த நாடுகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டது. இந்த ஆய்வு மக்களின் பாதுகாப்பு, உள்நாட்டு பிரச்சினைகள் போன்ற 23 காரணிகளைக் கொண்டு எடுக்கப்பட்டது. இதில் ஐஸ்லாந்து நாடு உலகிலேயே அதிக அமைதி நிலவும் நாடாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. 11 ஆண்டுகளாக இந்நாடு அமைதிப்பட்டியலில் தொடர்ந்து முதல் இடமே பெற்றுள்ளது. இந்த ஆண்டும் ஐஸ்லாந்து முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. இதனையடுத்து நியூசிலாந்து, ஆஸ்திரியா, போர்ச்சுக்கல், டென்மார்க் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. மொத்தம் 163 நாடுகள் கொண்ட இந்த பட்டியலில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு இந்தியா 5 இடங்கள் கீழே இறங்கியுள்ளது. இந்த ஆண்டு இந்தியா 141வது இடத்தை பிடித்துள்ளது. (7)

## காளிகோயிலை இடித்து மீன் சந்தை கட்டிய

# ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வியாழேந்திரன் முறைப்பாடு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடியிலிருந்த காளி கோயிலை உடைத்து மீன் சந்தை கட்டட குற்றச்சாட்டு உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு ஒன்றை பாராளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் பதிவு செய்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

நான் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களை முன்வைத்து முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தேன்.

ஒன்று ஓட்டமாவடியிலிருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான காளிகோயிலை உடைத்து காளி கோயில் காணியில் ஹிஸ்புல்லா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியை பாவித்து மீன் சந்தை கட்டியமை , தனக்குச் சார்பாக தீர்ப்பு சொல்லாத நீதிபதியை இடம் மாற்றி தனக்கு சார்பான நீதிபதியை நியமித்து தீர்ப்பை மாற்றி எழுதியமை, இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 குண்டு வெடிப்பு நடைபெற்ற மறுநாள் நாடு பூராகவும் ஊர டங்குச் சட்டம் அமுலில் இருந்த நிலையில் பாசிக்குடா விடுதியில் இருந்த மூன்று அரேபியர்களைத் தனது அதிகாரத்தை பயன்படுத்தி நாட்டை விட்டு வெளியேற்றியமை, அதில் ஒருவர் விசா இன்றி தங்கி இருந்தமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களை முன்வைத்து முறைப்பாடுகளை பதிவு செய்ததாகவும் இது குறித்து அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# புதிய போர் விமானங்களை அரசு கொள்வனவு செய்யும்

## தளபதிக்கு பிரதமர் வாக்குறுதி

(கொழும்பு)

விமானப்படைக்கு புதிதாக போர் விமானங்களையும் பயிற்சி விமானங்களையும் பெற்றுத் தருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

விமானப்படைத் தளபதியாக அண்மையில் பதவியேற்ற எயார் மார்ஷல் சுமங்கல டயஸ் நேற்று முன்தினம் காலை அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

இதன்போதே, விமானப் படைக்குத் தேவையான போர் விமானங்களையும் பயிற்சி விமானங்களையும் பெற்றுத் தர தயாராக இருப்பதாக, ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்தார்.



விமானப்படைக்கு அரசாங்கம் உலங்குவானூர்திகளையும் கொள்வனவு செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் பிரதமரின் பாதுகாப்பு இணைப்பாளர் மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரியவும் கலந்து கொண்டார். (இ-7)

# சஹ்ரான் தான் ஐ.எஸ். ஆதரவாளன் எனப் பகிரங்கமாக அறிவித்திருந்தான்



## அபுசாலி உவைஸ் சாட்சி

(கொழும்பு)

ஜனநாயகம் இஸ்லாத்தால் ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் நாட்டின் இறைமை தொடர்பில் சஹ்ரான் ஹாசிம் கேள்வியெழுப்பியதுடன், தான் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பின் ஆதரவாளன் என்பதைப் பகிரங்கமாக அறிவித்ததாக காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளத்தின் பிரதிநிதி சட்டத்தரணி அபுசாலி உவைஸ் தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டில் சஹ்ரானும் அவனுடைய ஆதவாளர்களும் வாள்கள் மற்றும் கத்திகளுடனும் இருந்த நிலையில் எப்படி இந்தளவு பாரிய ஆயுதங்களைப் பெற்றார்கள்? மிகவும் வறுமையில் இருந்த சஹ்ரானின் நிதி நிலைமை ஒன்றரை வருடங்களில் எப்படி இந்தளவு நிதியைப் பெற்று பலமானான் என்ற கேள்வி எம் மத்தியில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏப்ரல் 21 ஆம் திகதி குண்டுத் தாக்குதல் குறித்து விசாரணைகளை நடத்தி பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க வரவழைக்கப்பட்ட காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளத்தின் பிரதிநிதி சட்டத்தரணி அபுசாலி உவைஸ் சாட்சியமளிக்கையில் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கொட்டாவி

நீங்க சிரித்தால் இந்த உலகமும் சிரிக்கும்! என்று சொல்வதுண்டு. அதேபோல் இன்னொன்றும் சொல்லலாம். நீங்க கொட்டாவி விட்டால் இந்த உலகமும் கொட்டாவி விடும். ஆமாம் சேர் இது உண்மை தான்.

இது ஒரு தொற்று வியாதி போல் ஒருவர் வாயைத் திறப்பதை பார்த்து விட்டால் உடனே நமக்கும் ஒரு உந்துதல் வந்து விடும். கொட்டாவி விடுகின்றோம். இந்த கொட்டாவியைப் பற்றி நினைத்தாலே கொட்டாவி வந்து விடும் என்கிறார் ஒரு ஆராய்ச்சியாளர். அவர் பெயர் Dr.Provine. அவர் தன்னுடைய ஆராய்ச்சிக்கென்று எடுத்துக் கொண்ட விடயம் கொட்டாவி.

கொட்டாவியைப் பற்றி படித்தாலே கூட கொட்டாவி வந்து விடும் என்றார். ஒரு கூட்டத்திலே பல பேருக்கிடையே கொட்டாவி சம்பந்தமான விடயத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கின்றார். அவ்வாறு படிக்கின்ற போதே 75 சதவீதம் பேர் கொட்டாவி விட்டார்களாம். மற்ற விடயத்தை படிக்கின்ற போது 20 சதவீதம் பேர் தான் கொட்டாவி விட்டார்களாம். இந்தத் தகவலைக் கேட்கின்ற போது எத்தனை பேர் கொட்டாவி விடுகின்றீர்களோ? யாருக்குத் தெரியும்.

இது ஒரு விநோதமான செய்கையாகத்தான் இருக்கு! இது பற்றிய முழு விபரமும் இன்னமும் நம்மாலே கண்டு பிடிக்க முடியவில்லை. ஏன் என்றால் இதைப் பற்றிய ஆராய்ச்சியே ரொம்பக் குறைச்சல். எத்தனையோ முக்கியமான விடயங்கள் இருக்கின்ற போது இதைப்பற்றி யார் சேர் அக்கறையாக ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள். இருந்தாலும் ஒரு சிலபேர் இதிலே மும்முரமாக இருக்கின்றார்கள் Dr.Provine மாதிரி!

பொதுவாக கொட்டாவியைப் பற்றி இதுவரைக்கும் எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கிறது என்ன தெரியுமா? இரத்தத்திலே ஒட்சிசனை அதிகப்படுத்துவதற்கோ அல்லது இரத்தத்திலேயிருந்து அதிகப்படியான காபனீரொக்சைட்டை வெளியேற்றுவதற்கோ உண்டான ஒரு சுவாசப் பயிற்சி தான் கொட்டாவி. இப்படித் தான் எல்லோரும் நினைக்கிறார்கள். அது கொஞ்சம் பொருத்தமாகவும் தெரிகின்றது.

ஆனால் Dr.Provine உம் இன்னொருத்தரும் இதைப்பற்றி சில ஆராய்ச்சியெல்லாம் செய்து பார்த்து விட்டு இந்தக் கருத்து அவ்வளவு சரியாகத் தெரியவில்லை என்றார்கள்! ஏனென்றால் சுத்தமாக ஒட்சிசன் தேவைக்காக அவர்கள் கொட்டாவி விடுகின்றார்கள் என்று நினைக்கின்றது தப்புத்தானே! மனிதன் பிறந்து 5 நிமிடத்திலேயிருந்து இதை ஆரம்பித்து விட்டான். அது மட்டுமா? மிருகம்-பறவை-மீன் எல்லாம் கூட கொட்டாவி விடுகின்றது.

மனிதன் விடுகின்ற கொட்டாவியும் மாடு விடுகின்ற கொட்டாவியும் ஒன்றா? அது ஒரு முக்கியமான கேள்வி. தூண்டுதல் உணர்வு குறைவாக இருக்கின்ற போது மனிதன் கொட்டாவி விடுகின்றான். முக்கியமான ஒன்று நடக்கப்போகின்றது என்கிற எதிர்பார்ப்பிலே மிருகங்கள் கொட்டாவி விடுகின்றன. மிருகங்களைப் பொறுத்தவரைக்கும் இது உறுதியாகத் தெரிகின்றது. எப்படி என்றால் அதெல்லாம் கொட்டாவி விடுகின்ற போது இதயத்துடிப்பு அதிகமாகின்றது. இரத்த அழுத்தம் அதிகமாகின்றது. இது அந்த மிருகத்தைசெயற்படத் தயார்நிலைக்குக்கொண்டு வந்து விடுகின்றது.

மனிதன் எப்படி என்றால் சாவகாசமான சூழ்நிலையிலே கொட்டாவி விடுகின்றான். இப்ப உதாரணத்திற்கு ஒருத்தர் கூட்டம் குறைவாக உள்ள ரயிலில் நேரம் கழித்து வீடு திரும்பிக் கொண்டு இருக்கின்றார். அந்தச்சமயத்திலே வாயைத் திறப்பார்.

சிங்கம் எப்படித் தெரியுமா? சாப்பாட்டு நேரம் நெருங்குகின்ற போது கொட்டாவி விடும். siamese fighting fish. அப்படி என்றால் அது தனியாக இருக்கின்ற போது கொட்டாவி விடுகிறதில்லை.

கூட்டமாக இருக்கின்றபோது கொட்டாவி விடுகின்றது. தூண்டுதல் உணர்வு குறைவினாலே விடுகின்றோம் என்பது ஒரு கருத்து. அதேபோல் இன்னொரு கருத்து! முழித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கின்ற சூழ்நிலையிலே ஒரு உந்துதலை கொடுப்பதற்காக உடம்பு செய்கின்ற உதவி கொட்டாவி. அதற்கு உதாரணம் படுக்கையிலேயே இருக்கின்றவர்கள் கொட்டாவி விடுவது குறைச்சல். ஆனால் அதேநேரத்திலே நடு ராத்திரி தாண்டி கார் ஓடிக் கொண்டிருக்கிறவர்கள் அதிகமாக கொட்டாவி விடுகின்றார்கள்.

இந்தக் கருத்திலும் ஒரு குழப்பம் இருக்கின்றது. எப்படி என்றால் ஏற்கனவே தயார் நிலையில் இருக்கின்றவர்களுக்கும் கொட்டாவி வருகின்றதாம். உதாரணம் பரீட்சை எழுத உட்கார்ந்தால் சில பிள்ளைகளுக்கு கொட்டாவி தான் முதலில் வருகின்றது. அதன்பின் தான் answer வருகின்றது. ஆகையினால் கொட்டாவியைப் பற்றி இது தான் உண்மை என்று உடல் ரீதியான ஒரு விளக்கத்தை இன்னமும் கொடுக்க முடியவில்லை. ஏன் என்றால் அது எந்த நேரத்தில் வரும் என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை சேர்.


அடிக்கடி கொட்டாவி வருகின்றது என்று சொல்லிக் கொண்டு ஒருத்தர் வைத்தியரிடம் போனார். அவர் இவரை நாற்காலியிலே சாய்ந்து உட்கார வைத்து வாயைத் திறவுங்கள் என்றார். ஏதோ கொஞ்சம் மருந்தை வாயில் போட்டு விட்டு போய் விட்டார். கொஞ்ச நேரம் கழித்து திரும்பி வந்தார். அவர் திறந்த வாயை மூடவேயில்லை. இன்னும் அகலமாக திறந்து விட்டார்.

ஏன் சேர் பெரிய கொட்டாவியாக வருகின்றதா? என்று கேட்டார் வைத்தியர். இவர் மிகவும் சிரமப்பட்டு வாயை அசைத்துப் பதில் சொன்னார். கொட்டாவி எப்பவோ போய் விட்டது. இப்ப நான் வாயைத்திறந்தது உங்கள் கையில் இருக்கின்ற பில்லை பார்த்து விட்டு! என்றார்.

## குண்டுத் தாக்குதல் குறித்து முறையான விசாரணையில்லை

# பள்ளிவாசல்களில் கற்பிக்கப்படும் கல்வியே முஸ்லிம் அடிப்படைவாதத்திற்குக் காரணம்

### ரத்ன தேரர் குற்றச்சாட்டு



**(ஏறாவூர்)**

**பள்ளிவாசல்களில் கற்பிக்கப்படும் பிழையான கல்வியாலேயே முஸ்லிம் அடிப்படைவாதம் நாட்டில் தலைத் தூக்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார். அத்தோடு, இலங்கையில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்கள் குறித்து அரசாங்கம் இதுவரை முறையான விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.**

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான தேவாலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு சீயோன் தேவாலத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அத்துரலிய ரத்ன தேரர் விஜயம் செய்திருந்தார்.

இதனையடுத்து தேரர் உள்ளிட்ட குழுவினர், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்திற்கும் விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாடாளுமன்றில் தெரிவுக்குழுவை அமைத்து புலனாய்வாளர்களை வெளியுலகுக்கு காண்பித்து, புலனாய்வுத் துறையை பலவீனப்படுத்தும் செயற்பாட்டையே அரசாங்கம் இன்று மேற்கொள்கிறது. இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

உயிரிழந்தவர்களின் உயிர்களை எம்மால் மீண்டும் கொடுக்க முடியாது. ஆனால், இந்த சம்பவத்திற்குக் காரணமான அனைத்து விடயங்களும் நாட்டிலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும் என்பதுதான் எமது ஒரேயொரு நோக்கமாகும்.

சவுதி அரேபியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் இருந்து வந்துள்ள ஆசிரியர்கள், கொழும்பு, மட்டக்களப்பு உள்ளிட்ட பகுதிகளில் தங்கியிருந்து மக்களை மூளைச்சலவை செய்யும் செயற்பாட்டையே மேற்கொள்கிறார்கள்.

அதாவது, தனது மதம் சாராத அனைவரையும் விரோதிகளாக சித்திரிக்கும் வகையிலேயே இவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் காணப்படுகின்றன.

இப்படியான கொடூர பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க வேண்டும். இதற்கெதிராக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதை மக்கள் மிகுந்த அவதானத்துடன் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

தெரிவுக்குழு ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் நாமும் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனால், இன்று நாடாளுமன்றில் அதனை மீறிய ஒரு செயற்பாடே மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பில் போதிய தெளிவில்லாமல், புலனாய்வுத் துறையைப் பலவீனப்படுத்தும் செயற்பாடே இன்று மேற்கொள்ளப்படுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## நால்வர் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்களாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த நால்வர் புதிதாக நியமிக்கப்பட்டனர். சாவகச்சேரி பிரதேசசபையில் அங்கம் வகித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த நான்கு விகிதாசார உறுப்பினர்கள், தமது கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக தமது ஒரு வருட கால பதவிக் காலத்தை அண்மையில் முடிவுறுத்தினர்.

இதனால் சபையில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப சிவகுமாரன் கஜேன், ஜெயக்குமார் நிதர்சன், இராமநாதன் யோகேஸ்வரன் மற்றும் கந்தையா துர்க்கா ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் எதிர்வரும் சபை அமர்வுகளில் பிரதேசசபை உறுப்பினர்களாக பங்கேற்கவுள்ளனர். சாவகச்சேரி பிரதேசசபையில் ஒரு வருட காலம் அங்கம் வகித்த சாந்தகுமார், ஜயபாலன், பாலச்சந்திரன் மற்றும் சிவகுணசோதி ஆகியோர் பதவி விலகியமை குறிப்பிடத்தக்கது. ஏனைய கட்சிகள் தமது விகிதாசார உறுப்பினர்களை மாற்றி அமைக்காத போதிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் விகிதாசார உறுப்பினர்களை மாற்றி ஏனையோருக்கு வாய்ப்பளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

---

# இந்திய-இலங்கை இராணுவ அதிகாரிகள் பேச்சு; பயிற்சி வாய்ப்புக்களுக்கு தளபதி மகேஷ் கோரிக்கை





இந்திய- இலங்கை இராணுவ அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமாகின. இந்தப் பேச்சுக்களில் பங்கேற்பதற்காக இந்திய இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் 5 பேரைக் கொண்ட குழுவொன்று கொழும்பு வந்தது.

இந்தக் குழுவில் இடம்பெற்ற மேஜர் ஜெனரல் சுசீந்திரகுமார், கேணல் நிஷிட் ரஞ்சன், லெப். கேணல் சிறீநாத் சடிப்பா ரெட்டி ஆகியோரும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் அசோக் ராவ் மற்றும் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் ரவி மிஸ்ரா ஆகியோரும் நேற்று முன்தினம் பிற்பகல் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை இராணுவத்தின் இளம் அதிகாரிகளுக்காக இந்தியாவில் அளிக்கப்படும் பயிற்சி பயனுள்ளதாக இருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

இதுபோன்று சிரேஷ்ட அதிகாரிகளுக்கான புலனாய்வு, சிறிய ஆயுதங்களைக் கொண்ட பொறிமுறைகள் போன்ற பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயுமாறும் அவர் இந்திய அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

அதேவேளை, இலங்கை இராணுவத் தலைமையகத்தில் இரண்டு நாடுகளின் இராணுவ அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை ஆரம்பமானது.

இந்தக் கலந்துரையாடலுக்கு இராணுவத்தின் பொது அதிகாரிகள், பணிப்பாளர் மேஜர் ஜெனரல் நிசங்க ரணவானவும் இந்திய இராணுவத்தின் மேஜர் ஜெனரல் சுசீந்திர குமாரும் இணைத் தலைமை தாங்கினர்.

இந்தப் பேச்சுக்களில் இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புக்கள், பயிற்சிகள் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனைகள் நடத்தப்பட்டன. (இ-7)

---

# நுவரெலியாவிலுள்ள முகாமில் பயிற்சி பெற்ற தாக்குதல்தாரி

### சி.ஐ.டி.அறிக்கை



(கொழும்பு)

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் தற்கொலைத் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் நுவரெலியாவிலுள்ள முகாமில் பயிற்சி பெற்றவரென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்டவர் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தாக்குதலை நடத்தியவர், 2014 ஆம் ஆண்டிலிருந்து தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பில் இணைந்து செயற்பட்டமை தெரியவந்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயங்கரவாதி உட்பட மேலும் சிலர் எந்தேரமுல்ல மற்றும் நிந்தவூர் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ளனரென்றும் இவர்கள் நுவரெலியாவில் அமைந்துள்ள முகாமில் ஆயுதப் பயிற்சி பெற்றதாவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிக்கை சமர்ப்பித்தது.

இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்த கொழும்பு கோட்டை நீதிமன்றத்தின் பதில் நீதவான் இச் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தி அது தொடர்பில் எதிர்வரும் ஜுலை மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்தார். (இ-7)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# உயிரின் மொழி


அணுயுகம், வானவியல் யுகம், கைத்தொழில் யுகம், தொழில்நுட்ப யுகம் என கடந்த 18, 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளின் வெவ்வேறு காலகட்டங்கள் அழைக்கப்பட்டு, இன்றைய 21 ஆம் நூற்றாண்டானது உயிரியல் யுகமாக ஆராய்ச்சியாளர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. யுகங்களின் கால பிரமாணங்களும் குறிப்பிட்ட கால பகுதிகளில் வாழ்ந்த உயிரிகளின் தோற்றமும் வயதும் வேறுபட்ட பரிணாம வளர்ச்சிப் படிகளை உடையது.

| யுகம் | வருடங்கள் | மனித வாழ்வுக்காலம் |
|---|---|---|
| கிருத யுகம் | 17, 28, 000 | 1, 00, 000 |
| திரேதா யுகம் | 12, 96, 000 | 10, 000 |
| துவாபர யுகம் | 8, 64, 000 | 1, 000 |
| கலியுகம் | 4, 32, 000 | 100 |

சைவ சித்தாந்த ஏடுகளின் படி யுகங்கள் நான்கு வகைகளாகவும் ஒவ்வொரு யுகத்திலும் வாழும் மனிதனின் ஆயுட்காலமும் வேறு பட்டதாகக் காணப்படும்.

பிரம்ம ரகசியமாக கருதப்படும் உயிரிகளின் படைப்பும் அவற்றின் வாழ்க்கைச் சக்கரமும் என கூறப்படும் "தலை எழுத்து" நூற்றாண்டுகளாக அவிழ்க்க முடியாத மர்ம முடிச்சாகக் காணப்பட்டு இன்றைய உயிரியல் யுக நூற்றாண்டில் இவ்விதியின் ரகசியங்கள் மூலக்கூற்று உயிரியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. ஆனாலும், . தொல் உயிர் எச்சங்களின் வயது அவற்றின் புராதன தன்மை , பரிணாம வளர்ச்சி என்பன 19ஆம் நூற்றாண்டில் அறிவியல்பூர்வமாக ஆராயப்பட தொடங்கியது. இதன் முதற்படியாக ஆதித்தாய் , மூ 'தாய்' இற்றைக்கு சுமார் 2 லட்சம் வருடங்களுக்கு முன்னர் சகாரா பாலைவனப் பகுதியில் வாழ்ந்ததாக அறிவியல் மதிப்பிடுகின்றது. அதன் பிற்பாடு மானுடவியல்துறை ஊடாக மனிதனின் ஒற்றுமை வேற்றுமைகளை கண்டறியத் தொடங்கியும் பிற்பாடு டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையும் அறிவியல் பூர்வமாக இனங்களின் உயிரியல் சார் பிறப்பு, இறப்பு கோட்பாடுகளின் ஆதாரம் தேடப்படத்தொடங்கியது.


அந்தவகையில் ' காபன் கால நிர்ணய முறை' மூலமாக உலகின் ஆதிமனித இனத்தின் தொல் எச்சம் 4 இலட்சம் வருடங்கள் பழைமையானது எனக் கண்டறியப்பட்டது. ஆயினும் உயிரின் தொடர்ச்சிக்கு ஆதார மூலத்தை தேடி அறிவதில் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் எடுத்துக்கொண்ட காலமும் முயற்சியும் மிக பொறுமையும் பொருளியல் செலவும் மிக்கதாக அமைந்தது. இதன் முக்கிய படிக்கல்லாக, அகிலத்தின் ஒவ்வொரு உயிரும் ஒன்றிலிருந்து மற்றது வேறுபடுவதற்குக் காரணம், ஒவ்வொன்றுக்கும்தனித்துவமான DNA (Deoxyribo Nucleic Acid) என்ற மரபணுக்களைக் கொண்ட மிக நீண்ட இரசாயன மூலக்கூறு காரணமாவது அறியப்பட்டது.




DNA மூலக்கூறானது பெற்றோரிடமிருந்து ஒவ்வொரு மகவிற்கும் குரோமோசோம்கள் ஊடாக கடத்தப்படுகின்றது. ஓர் உயிரி வளர்வதற்கும், செயற்படுவதற்கும், இனப் பெருக்கம் செய்வதற்குமான முழுமையான தகவல்களின் தொகுப்பு இதில் அடங்கியுள்ளது. மனிதன் உட்பட அனைத்து உயிர்களிற்கும் அடிப்படை உயிரியல் அலகான உயிர்கலம் அல்லது உயிரணுவின் மைய பகுதியில் காணப்படும் கலத்தின் கரு/ உயிர்க் கருவில் உள்ள நிற மூர்த்தம்/ குரோமோசோம் (Chromosome) எனும் அமைப்பில் DNA காணப்படுகின்றது. ஆகவே, உடலின் எல்லாக் கலங்களிலும் DNA ஆனது காணப்படும்.

கருவில் உள்ள குரோமோசோம் களின் எண்ணிக்கை ஒவ்வொரு உயிராங்கிகளுக்கும் வேறுபடும். மனிதனில் 23 சோடி நிறமூர்த்தங்கள் உள்ளன. இவற்றில் உள்ள DNA மூலக்கூறில் மரபணு/ பரம்பரை அலகு என்று அழைக்கப்படும் பகுதியானது உயிரியின் எல்லாச் சிறப்புப்பண்புகளையும் நிர்ணயிக்கின்றன. உதாரணமாக பிறந்த குழந்தையின் சாயல் அம்மா போலே, அப்பா போலே உரிச்சு வச்சு வந்திருக்கிறான் என்று கூறுவதன் தார்ப்பரியம் பெற்றோரிடமிருந்து கடத்தப்பட்ட பரம்பரை அலகுகள் தாம். இன்னும் விரிவாக சொல்வதானால், இனப் பெருக்கத்தின் போது கருமுட்டையும் விந்தும் இணைந்து கருவுற்ற கலம் உருவாகும் போது, தாயின் கரு முட்டையில் 23 நிறமூர்த்தமும், தந்தையின் விந்தில் இருந்து 23 நிற மூர்த்தங்களும் புதிய மகட் கலத் திற்கு செல்லும். ஆகவே, புதிய மகவு உருவாகும் போது தாயிடமிருந்து சரி பாதியும், மறு பாதி தந்தையிடம் இரு ந்தும் பரம்பரை காரணிகள் நிற மூர்த்தங்கள் ஊடாக வருகின்ற காரணத்தால் குழந்தையின் சாயல் பெற் றோரை ஒத்திருக்கின்றது என நவீன மூலக்கூற்றியல் மூலம் உறுதி செய்ய ப்பட்டது.


புதிதாக பிறக்கும் உயிரின் தோற்ற அமைப்புகளிற்கு அப்பால்:உடல்வளர்ச்சியிலும்இளமை, முதுமை வரையான உடல் சார் மாற்றங்கள் முதற்கொண்டு இறப்பு வரை நடைபெறும் அனை த்து உயிரியல் சார் மாற்றங்களும் சரியான பிரமாணங்களில் குறித்த காலங்களில் நடைபெறுவதை பரம்பரை அலகு கள்/ மரபணுக்கள் (genes) தீர்மானிக்கின்றன. ஒவ்வொரு மரபணு வும், உயிர் வளர்ச்சிக்கும் உடல் செயற்பாட்டுக்கும் உரிய புரோட்டீன் களை உருவாக்கும். மந்திர கதைகளில் மந்திர வாதியின் சக்தி ஏழு கடல்கள், ஆறு




மலைகள் தாண்டி ஏதோ ஒரு பத்து தலை நாகபாம்பின் நாக மணிக்குள் வைத்திருப்பது போல் சித்திரிப்பார்கள். ஆனால், ஒவ்வொரு உயிரினதும் உயிர் இரகசியம் உடலில்உள்ள ஒவ்வொரு அணுவிலும் பிரதி செய்யப்பட்டிருக்கும்.

மேலும் இம்மரபு பண்புகள் சந்ததிக்கு சந்ததி இனப் பெருக்கத்தின் தாய்-தந்தையிடமிருந்து குரோமோ சோம்கள் மூலம் கடத்தப்படும். ஒவ்வொரு மரபணுக்களும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மரபியல்புகளிற்கு காரணமாகின்றன. மனிதனில் உள்ள 23 சோடி நிறமூர்த்தங்களில் 20,000 முதல் 25,000 வரையான பரம்பரை அலகுகள் காணப்படுவதாக நவீன மரபணுவியல் (genomics) 21ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் மூலக்கூற்றியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஆய்ந்தறியப்பட்டது. நிறமூர்த்தங்களில் காணப்படும் DNA மூலக்கூறின் மொழி அடையாளமானது அமில வேதிப்பொருட்களால் உருவானது என்கிறார்பிரடெரிக் சாங்கர் (Sanger). இவை நிறமூர்த்தத்தில் உள்ள DNAமூலக்கூறின் நீண்ட இரட்டை விரிபரப்பு சுருளில் ATGC எனும்பல பல தொடர் அடுக்கில் மாறி மாறி அமையும். நீண்ட DNA சங்கிலியின் அமில வேதிப் பொருட்களின் திரட்சியில் உள்ள எழுத்துக்களை வரிசைப்படுத்தும் போது சிலநூறு கோடி எழுத்துகள் கொண்ட மனிதனின் மரபணு தகவல் ஜீனோம் 3.234.83 Megabasepairs கண்டறியப் பட்டதே இன்றைய உயிரியல் யுக த்தின் திருப்புமுனையாகும். ஏனெனில் இந்த ஜீனோம் தொடர் தான் ஒவ்வொரு உயிரினதும் மொழியாகும். அதுவே அவற்றின் தலை எழு த்து எனலாம் எமது தமிழ் மொழி நடையில். அவ்வகையில் மரபணுத் தொடரானது ஒவ்வொரு இனத்திற்கும்தனித்துவமானது.

இன்று கடல்போல், ஜீனோம் தகவல் தளம் பல்வேறு உயிரிகளின் ஜீனோம்களால் நிரம்பிக் கிடக்கிறது. மனித இனத்திற்குரிய மரபணுத்தொடர் எழுத்துக்கள் மனித இனத்திற்கு பொதுவானது. புறத்தோற்ற வேறுபாடுகள் இருந் தாலும், உயிரியல் மூல அடிப்படையில் மனிதர்கள அனைவரின் உயிர் மொழி ஒன்றாம், அவை வாழும் சூழல், வளர்ப்பு காரணிகளாலேயே வேறுபடுகின்றது.




Adinine (A), Guanine (G), Cytosine (C), Thymine (T), அதாவது A, G, C, T என்கிற நான்கெழுத்துக்களால் குறிக்கப்படும்

மனிதனில் காணப்படும் 23 சோடி நிறமூர்த்த அமைப்புகள்

அ.அஷானி,
உயிர் தொழில் நுட்பவியல்,
உயர் பட்டப்படிப்புகளிற்கான கமத்தொழில் நிறுவகம்,
பேராதனை பல்கலைக்கழகம்.

புதிர் 225 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

ஜெராண்ட் ஜீவாதாசன்
யோவான் அருணன்
இல.72,கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

புதிர் 225 க்கான கேள்வியும் விடையும்:
இப்புவியில் தற்போது வாழும் மிகப்பெரிய விலங்கு எது?
நீலத் திமிங்கலம்

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

273

இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக இருந்த எஸ். நடேசன் (சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மருமகன்) யாழ்ப்பாணத்து மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தமையாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக போட்டியிடுவதால் அவருக்கு அமைச்சுப் பதவி கிடைக்கும் என வடமாகாணத் தமிழர் நம்பியதன் விளைவாகவும் எஸ்.நடேசன் தேர்தலில் வெற்றி பெற்றார்.

தேர்தலில் தோல்வியடைந்த செல்வநாயகம் தொடர்ந்தும் தமிழரின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் பாராளுமன்றத்திற்கு வெளியிலிருந்து போராட்டங்களை நடத்தினார். வன்னியசிங்கம் தமிழரசுக் கட்சியின் உப தலைவராகவும் செல்வநாயகத்தின் வலது கரமாகவும் பாராளுமன்றத்தில் செயற்பட்டார். அத்தோடு நாகநாதனும் வன்னியசிங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்.



வன்னியசிங்கம்

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைத் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தமிழ்ப் பிரதிநிதியின் ஆதரவும் செல்வநாயகத்திற்குக் கிடைத்திருந்தது. மட்டக்களப்புத் தொகுதியில் வெற்றிபெற்ற தமிழ்ப் பிரதிநிதியின் ஆதரவும் செல்வநாயகத்திற்குக் கிடைத்த போதும் பின்னர் அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தமையால் அதனை இழக்க நேரிட்டது.

இடதுசாரிக் கட்சிகளின் பெரும்பான்மையான பிரதிநிதிகள் சிறுபான்மைத் தமிழரின் உரிமைப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சிக்குத் தமது ஆதரவைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வழங்கினர்.

1951 ஜூலை 12 இல் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தனது உள்ளூராட்சி அமைச்சுப் பதவியையும் சுகாதார அமைச்சுப் பதவியையும் பாராளுமன்றத் தலைவர் பதவியையும் இராஜினாமாச் செய்தார்.

1951 ஜூலை 15 அன்று அவர் அரசாங்கத்திலிருந்து விலகி தீவிர இடதுசாரி மார்க்சிஸ்ட் கட்சிகளுக்கும் இடைநிலைப்பட்ட நடுநிலைக் கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தார். எனவே பண்டாரநாயக்க 1951 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாத முற்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்தபோது முதன்முறையாக வாக்காளருக்கு ஜனநாயக ரீதியிலான ஒரு மாற்றுவழி கிடைத்தது.

இருந்தபோதிலும் 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 81 தொகுதிகளில் போட்டியிட்டு 54 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்று நிற்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 48 தொகுதிகளில் போட்டியிட்டு 9 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே பெற்றது.

மேற்படி இலங்கைப் பாராளுமன்ற அரசியல் பின்னணியை வைத்துக்கொண்டு மேற்படி காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் தொடர்பாக இடம்பெற்ற முக்கிய சம்பவங்களை நோக்குவது இலகுவானதாகும். 1952களிலிருந்து 1956 கள் வரையில் சிறுபான்மைத் தமிழர் தொடர்பாக மிக முக்கியமான நான்கு சம்பவங்கள் இடம்பெற்றன.

இவற்றில் முதலாவதும் முக்கியமானது தமிழரசுக் கட்சி சமஷ்டி அரசு முறையைக் கோரி தனது கொள்கைகளை முன்வைத்தமை. இரண்டாவதாக தனிச்சிங்கள மசோதாவை தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ஏனைய சுயேட்சைத் தமிழ்ப் பிரதிநிதிகள் ஆகியன மிகவும் கடுமையாகவும் எதிர்த்தமையாகும்.

மூன்றாவதாக தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராக தமிழ் அரசியல் தலைவர்கள் ஆட்சேபனை தெரிவித்தமையாகும்.

நான்காவதாக இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை, வாக்குரிமை தொடர்பாக குரல் கொடுத்தமையாகும். தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் பற்றி இவ் அத்தியாயத்தில் தனியாக ஆராய இருப்பதால் ஏனைய மூன்று விடயங்கள் பற்றி தொடர்ந்து சுருக்கமாக விபரிக்கப்படும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இந்தியத் தமிழர் பிரதானமாகத் தோட்டத் தொழிலாளராக இருந்ததுடன் வெளித்தொடர்பின்றித் தத்தம் பெருந்தோட்ட எல்லைகளின் உள்ளேயே தனிமைப்பட்டவராய் வாழ்ந்தனர். இவர்கள் இலங்கைத் தமிழரிடமிருந்து சமூக ரீதியில் மட்டுமன்றி புவியியல் ரீதியிலும் பிரிந்தே வாழ்ந்தனர்.

ஆர்.கேணி (R. Kearney) கூறுவது போல், மொழி, சமயம் என்பவை இவ்விரண்டு இனத்துக்கும் பொதுவாக இருந்தபோதிலும் வேறுபட்ட வரலாற்றுப் பின்னணி, பொருளாதார நிலை, சாதி என்பவற்றுடன் இலகுவில் விளக்கமுடியாத சுய அடையாள உணர்வு போன்ற காரணிகள் இவ்விரு இனங்களும் ஐக்கியப்படுவதைப் பாதித்துள்ளன.

இந்த வேறுபாடுகள் இருந்த போதிலும் தமிழரசுக்கட்சி ஆரம்பித்த உடனடிக் காரணம் இந்தியத் தமிழரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே எனத் தெரியவருகின்றது. 1948 ஆம் ஆண்டிலும் 1949 ஆம் ஆண்டிலும் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை சட்டபூர்வமாகப் பறிக்கப்பட்ட போது டி.எஸ். சேனநாயக்க 1948, 1949 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்திய இந்தியத் தமிழர் பிரஜாவுரிமை சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க அவர்கள் தம்மைப் பிரஜைகளாகப் பதிவு செய்திருப்பின் குடிவரவைக் கட்டப்படுத்துவதற்காக 1948 இறுதியில் அமுல்படுத்தப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி அவர்களில் பலர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குத் தகுதி பெற்று அவ்வாறு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பர்.

இந்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசு பல பேச்சுவார்த்தைகளை நடத்தியும் இந்தியத் தமிழர் எதுவித பலனையும் அடையவில்லை. தமிழரசுக் கட்சியும் செல்வநாயகமும் இந்தியத் தமிழரின் பிரஜாவுரிமை அவர்களுக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டுமெனப் பாராளுமன்றத்திலும் பொது மேடைகளிலும் இந்தியத் தமிழருக்காகத் தொடர்ந்தும் குரல் கொடுத்துப் போராடினர்.

(தொடரும்)



# கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம் மீளத் திறப்பு





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் நேற்று முன்தினம் மாலை மீண்டும் திறக்கப்பட்டது.

இதன்போது பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்றன. (இ-7)

# பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இலங்கைக்கு ஜப்பான் ஒத்துழைப்பு

(கொழும்பு)

உலகளாவிய பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க ஜப்பான் தயாராக இருப்பதாக ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் டொசிகோ அபே (Mrs.Toshiko abe) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் இரு நாடுகளும் கவனம் செலுத்தியுள்ளன.

இது சர்வதேச பயங்கரவாதச் செயற்பாடுகள் நாட்டில் இடம்பெறுவதை தடுப்பதற்கு முக்கிய நடவடிக்கையாக அமையும் என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்



கவுக்கும் அபேக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் காலை கொழும்பு அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதமர், பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஜப்பான் வழங்கும் ஒத்துழைப்புக்கு இலங்கை நன்றி தெரிவிப்பதாக தெரிவித்தார்.

இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். இலங்கையில் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகளில் இந்தியா மற்றும் ஜப்பானுடன் கூட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் ஜப்பான் தூதுவர் அகிர சுகியாம (Mr. Akira Sugiyama), தூதுவர் அலுவலகத்தின் அதிகாரி டிகெசி ஒசாகி மற்றும் ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# வெடிக்கத் தயாராக இருந்த குண்டு மாத்தளையில் மீட்பு

(மாத்தளை)

மாத்தளையில் வெடிக்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், நேரத்தை குறித்து வைத்து வெடிக்க வைக்கும் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

மாத்தளை, கருதேவல பிரதேசத்திலுள்ள காணி ஒன்றில் இருந்து இக் குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிளாஸ்ரிக் மற்றும் இரும்புக் கம்பியின் உதவியுடன் வெடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நேரக் குண்டு ஒன்று, 4 டெட்டனேட்டர்கள், 4 பட்டாசு உட்பட பொருட்கள் தொகை ஒன்று நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டது.

அந்த வீதியில் பயணித்த நபர் ஒருவரால் இந்த சந்தேகத்திற்குரிய பார்சல் தொடர்பில் பொலிஸாரிடம் அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அவ்விடத்திற்கு சென்று சோதனையிட்ட பொலிஸார், இரும்பு ஒன்றுக்குள் வெடிபொருட்கள் நிறைத்து, டெட்டனேட்டர் மற்றும் பற்றரி உதவியுடன் தயாரிக்கப்பட்ட குண்டை வெடிப்பதற்குத் தயார் படுத்தப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் குண்டை உக்குவெல இராணுவக் குழுவினர் சோதனையிடுவதற்கு நடவக்கை மேற்கொண்டனர்.

அங்கு 12 அம்பியர் பற்றரி, சிறிய மின்விளக்கு, பட்டாசு கள், 4 டெட்டனேட்டர்கள், ஒரு கிலோ கிராம் வெடிபொருள் தூள் கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடி பொருட்கள் என்ன காரணத்திற்காக கொண்டு வரப்பட்டன என இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1748

### ஆதித்யா

டவுட்டு
மணல் மணலா நெய் இருந்தா
நாம எப்படி சாப்பிட முடியும்



### மிலோஷ்

மனைவி: ஏங்க! சாதாரணமா இருக்கிறப்ப முத்தே மணியே என்று கொஞ்சுறீங்க... குடிச்சா மட்டும் பேயே பிசாசே என்று திட்டுறீங்களே?
கணவன்: என்னடி பண்றது போதை ஏறிட்டா எனக்குப் பொய்யே வரமாட்டேங்குது



### நர்மிதன்

இப்படி அடம்பிடித்துப் பாடசாலைக்குப் போன அனுபவம் உண்டா?



### வைத்தீஸ்

விடுப்பா விடுப்பா
தை மாசம்னா சூரியனுக்கு நாம பொங்கல் வைக்கிறதும் வெயில் காலம்னா சூரியன் நமக்கு பொங்கல் வைக்கிறதும் சகஜம் தானே



### தசாங்கன்

நம்மை முந்திச் செல்பவர்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை... ஏதாவது ஒரு சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்துகொண்டுதான் இருக்கும்- வாழ்க்கை



### சபிதா

நமக்குப் பிடித்தவர்கள் நம்மைக் காயப்படுத்தும் போதுதான்... இல்லாதவற்றையும் இழந்தவையும் பற்றி ஆழமாக யோசிக்கத் தோன்றும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஈழத்துத் தமிழறிஞர் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார்

ஈழத்தில் பல புலவர்கள் வாழ்ந்தமையால் (புலவர்+ஒலி=புலோலி) புலோலி என்னும் காரணப் பெயருக்குரிய ஊரிலே பரம்பரை பரம்பரையாக பல தமிழறிஞர்கள் வாழ்ந்து தமிழ் வளர்த்த வரலாறு யாவரும் அறிந்ததே. அவ்வகையில் தென்புலோலியூரிலே தமிழறிவில் மன்னராகத் திகழ்ந்த அறிஞர் கந்தமுருகேசனார் வந்து உதித்தார்.

அவரை மக்கள் தமிழ்த் தாத்தா என்றும் உபாத்தியாயர் என்றும் அன்பாக அழைப்பர். தென்புலோலியில் தமிழன்னையின் அருந்தவப் புதல்வனாக வந்துதித்த தாத்தா தமிழ்ப் பணியுடன் சமூகப்பணி, பகுத்தறிவுப்பணி ஆற்றியதனால் அவர் புகழ் தமிழகம் வரை பரவிற்று. பல தமிழக அறிஞர்கள், ஈழத்து அறிஞர்கள் வந்து அவரைக்கண்டு பேசி மகிழ்ந்தனர். அத்தகையவர்களுள் அரசியல்வாதிகளும் அடங்குவர். அவர் ஈழத்தில் சிறந்த பகுத்தறிவு வாதியாக, சிந்தனைவாதியாக, சமூக சீர்திருத்தவாதியாக, செந்தமிழ்ப் புலவராகத் திகழ்ந்திருக்கிறார் என்றால் மிகையாகாது.

தாத்தாவின் பள்ளிப்படிப்பு நான்காம் தரத்துடன் முடிந்தது. ஆனால் ஆசிரியராக, புராணங்களுக்குப் பயன் சொல்பவராக பக்தகோடிகள் அவரைப் புகழ்ந்தனர். அவர்களின் உள்ளத்தில் அவர் படித்த அறிஞராக, பக்தனாகத் தோன்றினார். எனினும் அவரது வாழ்வில் புயல் வீசியது, வந்தது விபத்து, வாழ்க்கைப் படகு கவிழ்ந்தது, கால்கள் வலுவிழந்தன. ஏறத்தாழ 25, 26 வயதளவில் இது நிகழ்ந்தது. இப்போது பக்தர்கள் அவரைக் கைவிட்டனர். புராணங்களுக்கு பயன் சொன்ன அவர் பயனற்றவர் என பக்தர்கள் நினைத்தனர். இதன்பின் தான் நாத்திகத்தின் பால் அவர் நாட்டம் கொண்டாரோ? என்னவோ? அறிகிலோம். எனினும் பண்பட்ட உள்ளம் புண்படுமா? அவர் உள்ளம் மகிழ்ந்தது. புதிய நண்பர்கள் கிடைத்தனர். அவர்கள் வேறு யாருமல்லர். மாபெரும் அறிஞர்களின் கருத்துரைகளை ஏந்தி நிற்கும் ஏட்டுச் சுவடிகள் தாம் அவை. இரவு–பகலாகப் படித்தார். சிந்தனை வளர ஆரம்பித்தது.

கோவை கோவையாகச் சிந்திக்கலானார். சிறந்த சிந்தனையாளரானார். கார்ல்மாக்ஸ் சிந்தித்தார். பொதுவுடைமைத் தத்துவம் உலகிற்குக் கிடைத்தது. வள்ளுவர் சிந்தித்தார். திருக்குறள் என்னும் முக்காலமும் பொருந்தும் வாழ்க்கை இலக்கியம் உலகிற்கு கிடைத்தது. கந்தமுருகேசனார் சிந்தித்தார். அதன் விளைவு கன்னித்தமிழ் புதுமெருகு பெற்றது. தமிழின் கந்தத்தையும் அதன் முருகையும் அதாவது அழகையும் உலகிற்கு உணர்த்தியதால் தானோ கந்தமுருகேசன் ஆனாரோ? என எண்ண வைக்கிறது என்ற வித்துவான் க.ந.வேலனின் கூற்று எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

இவ்வாறு கன்னித்தமிழின் முருகை உணர்ந்து, அனுபவித்து அதன் கந்தத்தை முகர்ந்து அதன் முழுமையை உணர்ந்ததால் தானோ? அவரின் நாவில் தமிழன்னை நடனமாடுகின்றாள். அவரின் உறைவிடம் பற்றி ஒரு கற்றறிந்த அறிஞர் இவ்வாறு கூறுகின்றார். அப்பிரதேசம் இயற்கையின் அழகுப் படைப்பு. நீண்டு வளர்ந்த பனைமரங்கள், அவை ஏந்தி நிற்கும் மதுக்குடங்கள், அவைகளை ஒட்டிச் செல்லும் நடைபாதை, அதில் அன்னநடையோடு வண்ணக்குடமேந்தி ஆணழகன் எண்ணத்தைப் பறித்துவிடும் மங்கையர்கள். இதற்கடுத்துச் சற்றுத் தொலைவில் வரம்பொடு அணைந்து கிடக்கும் வயல்கள். அங்கு நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட நித்தமுழைக்கும் உழவர் கூட்டம். இத்தகைய அமைப்போடு காட்சிதரும் புலோலிக் கிராமத்தில் அதையடுத்துள்ள நெய்தல் நிலத்தில் கோயில் கொண்டருளி அருள்பாலிக்கும் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் செல்லும் வழியில் வடக்கே திரும்பினால் சாதாரண குடிசை. தமிழகம் எனும் அக் குடிசையின் முன்றலில் மல்லிகைப் பந்தல் கீழே வெண்மணற் பரப்பு.

அங்குள்ள திண்ணையில் அகத்தியர் போல் குள்ளமான தோற்றத்தில் ஒரு கவர்ச்சி அழகு தெரியும் காந்தக் கண்கள். உயர்ந்த, பரந்த, அகன்ற நெற்றி, எடுப்பான மூக்கு, பொன்னிற மேனி, வெண்தாடி வேந்தர் ஈ.வே.இராமலிங்கசாமிப் பெரியார் போல வெண்தாடி கறைபடியா முத்துப் பற்கள், பருத்த உதடுகள், இருந்த இடத்திலிருந்து எழுந்திருக்கக் கூடாதென புரட்சி செய்து தடுக்கும் கால்கள் இதுதாம் செந்தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் புறத்தோற்றம்.

தாத்தாவின் இல்லம் திண்ணைப் பள்ளிக்கூடமாக "தமிழகம்" என்னும் பெயரில் விளங்கிற்று. உண்மையில் அது மகாகவி கண்ட "சாந்திநிகேதன்" என்று கூறமுடியும். "தமிழகம்" என்பதை விட "கலையகம்" என்பது இன்னும் கூடப்பொருந்தமாக அமையும். காரணம் அங்கு தமிழ் மட்டுமல்ல சமயம், தர்க்கம், பூமிசாத்திரம், கணிதம், சதுரங்கம், மல்யுத்தம் என பல கலைகளின் ஊற்றிடமாய்த் திகழ்ந்தது என்றால் மிகையில்லை. தமிழகத்தில் பாலர்கழகம் முதல் பண்டிதர் வகுப்பு, வித்துவான் வகுப்பு ஈறாய் எப்போதும் மாணவர்களால் நிறைந்திருக்கும்.

தேன் உள்ள இடத்தில் எறும்புகள் மொய்ப்பதில் தவறில்லையே. பாலர் முதல் பட்டதாரிகள் வரை அவரால் கவரப்பட்டார்கள். பிரம்மச்சாரியாக வாழ்ந்து வேறு எந்த இன்பத்தையும் அனுபவியாது தமிழ்ப்பணியாற்றுவதையே பேரின்பமாகக் கொண்டு தமிழருக்கு அரும்பெரும் தொண்டாற்றிய தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் நினைவு நாள் இன்றாகும்.

கி.குகநாதன்
அதிபர்
(யா/புற்றளை மகா.வித்)

# தீர்மானத்தை மாற்றியமைத்தது நகர சபைக்கு தலைகுனிவு! முன்னாள் உறுப்பினர்கள்

(சாவகச்சேரி)

சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஆறு மாத காலத்திற்குள் மீண்டும் மாற்றியமைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என சாவகச்சேரி நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் தெரிவித்தனர். அண்மையில் சாவகச்சேரி பொதுச் சந்தைக் குத்தகை விடயத்தில் நகர சபையினர் சபைத் தீர்மானத்தினை மீள் பரிசீலனை செய்து மாற்றி அமைத்தது தொடர்பாக முன்னணி உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தனர். மேலும் அவர்கள் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, அறிக்கையிடப்பட்ட பின்னர் தீர்மானத்தை ஆறு மாத காலத்திற்குள் மாற்றி அமைக்க இயலாது. அவ்வாறு மாற்றி அமைப்பதாக இருந்தால் சபையில் உள்ள சகல உறுப்பினர்களும் அதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

அவ்வாறு சகல உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் தீர்மானத்தை மாற்றுவதனால் அது கடும் சட்டச் சிக்கலை ஏற்படுத்தும். உரிய சபையின் தீர்மானத்தை கண்டித்து சந்தை வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியமை தவறு. இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டம் கடந்த வருடம் சமுர்த்தி பயனாளிகளால் நகரசபைக்கு எதிராக நடத்தப்பட்டது.

ஆனால் அன்று தமது சமுர்த்தி வங்கிக்கான காணிக் கோரிக்கையை முன்வைத்து பயனாளிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்திற்கு இன்றுவரை நகரசபையால் தீர்வு வழங்கப்படவில்லை. அப்படி இருக்கையில் சந்தை வியாபாரிகளின் போராட்டத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன்? தனி வியாபாரிகளுக்காக சபையினைக் குழப்புவது மாபெரும் தவறு. இவ் விடயத்தால் வடமாகாணத்தில் சாவகச்சேரி நகரசபைக்கு தலைகுனிவு ஏற்பட்டுள்ளது.

முதலில் ஊழலை ஒழிக்க வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். முன்னணி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்குவது என்ற சபைத் தீர்மானத்தை நகரசபையினர் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் மாற்றியமைத்து சந்தையைத் தொடந்தும் நகர சபையே நடத்தும் என இறுதி முடிவெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# இலங்.மீனவர்களை விடுவித்த பாக்.

(கொழும்பு)

பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த 5 மீனவர்கள் விடுதலை செய்யப்படடனர்.

கடந்த மார்ச் 26 ஆம் திகதி மிரிஸ்ஸ கடற்பிராந்தியத்திலிருந்து இலங்கை மீனர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் பாகிஸ்தானில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மீனவர்கள் எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் நாடு திரும்புவார்கள் என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஹற்றனில் நேற்று வேலை நிறுத்தம்





(ஹற்றன்)

நாடளாவிய ரீதியில் இ.போ.ச. பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஹற்றனில் நேற்றுக் காலை 8 மணி முதல் வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

நிலுவைப் பணம் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீண்ட காலமாக பணிபுரிந்து வரும் உத்தியோகத்தர்களின் பதவியுயர்வு தொடர்பில் வலியுறுத்தியும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் ஹற்றன், கொழும்பு, நுவரெலியா, கண்டி, மஸ்கெலியா, பொகவந்தலாவ, தலவாக்கலை, டயகம மற்றும் ஏனைய பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ஹற்றனில் இ.போ.சபைக்கு சொந்தமான 90 பேருந்துகளின் சாரதிகளும் நடத்துநர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளதுடன், தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்து அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 240 | 180 | 300 |
| தக்காளி | 100 | 80 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 120 | 120 | 100 |
| கோவா | 140 | 100 | 60 | 100 |
| கரட் | 150 | 140 | 120 | 160 |
| பூசணி | 80 | 60 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 50 | 55 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 90 | 120 |
| பாகற்காய் | 200 | 180 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 160 | 100 | 160 |
| லீக்ஸ் | 150 | 90 | 70 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 200 | 90 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 240 | 150 | 120 |
| போஞ்சி | 250 | 180 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 100 |
| கீரை -1பிடி | 30 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 300 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 110 | 140 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | – |
| முள்ளங்கி | 80 | 80 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 80 | 110 | 120 |




# புத்திரன்



தூது சென்ற கண்ணனால் கௌரவர்களை சமாதானம் செய்ய முடியவில்லை. இனி போர் தவிர்க்க முடியாதது என்ற முடிவுக்கு வருகிறான். சதுரங்க ஆட்டத்தில் முதல் காயை கண்ணனே நகர்த்துகிறான். கௌரவர்களின் படைத் தலைவனான கர்ணனிடம் பாண்டவர்களை ஒழித்துவிடும் உக்கிரம் இருப்பதை கண்ணன் அறிந்திருந்தான். வரும் வழியில் அங்க தேச அரசனான கர்ணனிடம் நீ சூதனல்ல, சத்ரியன். உன் தாய் குந்தி. நீ பாண்டவர்கள் ஐவரில் மூத்தவன் என்ற உண்மையை தெரியப்படுத்திவிட்டுத்தான் குந்தியிடம் வந்து விபரத்தை தெரிவித்தான்.

குந்தி குந்திபோஜனால் வளர்க்கப்பட்டவள். பிராமண சேவைக்காக துர்வாசர் அளித்த வரத்தை தவறாகப் பயன்படுத்தி சூரியனால் முறை தவறி விவாகத்துக்கு முன்னரே தாயானவள். அந்தச் செயலுக்கான பலன்கள் அவளை நிழல் போல பின்தொடர்ந்து வந்துள்ளது. இந்த உலகில் வினைப்பயன் தானே பிறப்பு இறப்பை நிர்ணயிக்கிறது. குந்தியே மறந்துவிட்ட ஒன்று. எப்போதோ அவள் எச்சமிட்டது இப்போது விருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

குந்தியை பகடைக்காயாக உருட்ட கண்ணன் முடிவெடுத்துவிட்டான். அவனுக்குத் தேவை பாண்டவர்களின் வெற்றி. சுயம்வரத்தில் சூதனென்று திரௌபதி நிராகரித்த போது முன்வந்து வெளிப்படுத்தாத கண்ணன் தனது எண்ணம் ஈடேறும் பொருட்டு கடைசி ஆயுதமாக இந்த அஸ்திரத்தை உபயோகிக்கிறான்.

இராச்சியத்தை இழந்தவர்களுக்கு இராச்சியத்தை அடைய வேண்டுமென்ற வெறி இருக்கும். பாண்டவர்களிடம் அந்த வன்மத்தை தீமூட்டி வளர்த்தவள் திரௌபதி. திரௌபதி போர் நிகழ்வதற்கு காரணமாகவும் குந்தி போரின் முடிவுக்கு காரணமாகவும் அமைந்து விடுகிறார்கள். ஆவதும் அழிவதும் பெண்ணாலே என்ற சொற்றொடருக்கு இதுவும் காரணமாக அமையக்கூடும்.

பாண்டுவைக் கைப்பிடித்து பட்டத்து ராணியாக ஓராண்டு மட்டுமே குந்தியால் இருக்க முடிந்தது. பாண்டு இறந்தவுடன் மாத்ரி உடன்கட்டை ஏற அவளது இரு புதல்வர்களையும் தன் மகன்களாகவே வளர்த்து வந்தாள் குந்தி. பாண்டவர்களிடம் எதைக் கொண்டும் பிரிவு வந்துவிடக் கூடாதென்று உறுதியோடு இருந்தாள். அர்ஜுனன் வில்வித்தை காண்பித்து வென்று வந்த பரிசுப் பொருளான திரௌபதியை ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்று சொன்னதற்கும் இதுதான் காரணம்.

ஆளாகிவிட்ட பாண்டவர்களுக்கு அவர்களின் பங்கை அளிக்க திருதுராஷ்டிரன் முன்வர வேண்டுமென குந்தி விரும்பினாள். சூதில் திரௌபதியை பணயம் வைத்து தோற்றதற்காக பீமன் வெகுண்டெழுந்த போது கூட குந்தி தான் அவனைச் சமாதானப்படுத்தினாள். திரௌபதியை துகிலுரித்தபோது ஆண்மையற்றவர்களை பிள்ளைகளாகப் பெற்றுவிட்டோமே என அவள் வயிற்றில் அறைந்து கொண்டாள். அந்த சம்பவத்துக்கு பிறகு ஐம்புலன்களை இயக்கும் மனமாக ஐந்து பேரையும் திரௌபதிதான் இயக்கி வந்தாள்.

இப்போது அவளுக்கு கர்ணன் தன் மகன் என்பதை விட தான் பாண்வர்களின் ராஜமாதா என்பதே முக்கியமாக இருந்தது. இராச்சியம் பாண்டவர்களுக்கு கிடைக்க தான் கர்ணனிடம் மடிப்பிச்சை கேட்கத் தயாராக இருப்பதாக கண்ணனிடம் அவள் தெரிவித்தாள்.

போருக்கு முதல் நாள் மாலை கங்கைக் கரையில் உலவிக் கொண்டிருந்த கர்ணனை தயக்கத்துடன் சந்திக்கச் சென்றாள் குந்தி. "என் மகனே எப்படி இருக்கிறாய்"?

"யாரம்மா நீ? என்னை உரிமையுடன் மகனே என்று அழைக்கிறாய்"?

"குழந்தாய்! உன்னை இந்த பாழும் நரகத்தில் தள்ளி விட்டவள் நான் தான்"!

"ஓ, உங்களது குரல் என் நெஞ்சைப் பிளக்கிறதே. பூர்வ ஜென்ம தொடர்போ! யார் நீங்கள் நான் தேரோட்டி அதிவிரதன் மகன் அங்கதேச அரசன்"

"நான் துர்பாக்கியவதி குந்தி தேவி". "ஓ, ராஜமாதாவா!

துரோணாச்சாரியார் சத்ரியனுக்கு மட்டும் தான் அர்ஜுனனை எதிர்த்து நிற்கும் உரிமை உள்ளது என்ற போது அவையிலிருந்த நீங்கள் உங்கள் திருவாயைத் திறந்து என் மகனே என்று அழைத்திருக்கலாமே. துரியோதனன் எனக்கு மகுடம் சூட்டி அங்க தேச அரசையே எனக்கு அளிக்க முன்வந்த போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள். இப்போது நான் கௌரவர்களின் படைத் தலைவன் என்பதால் தானே என்னைச் சந்திக்க வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும். துரியோதனனுக்கு என்னால் துரோகம் இழைக்க முடியாது. இந்த செல்லாக்காசுக்கு மதிப்பளித்தவனின் முதுகில் குத்துவது நியாயமாகாது"

"உன்னை அழைத்துச் செல்லவே வந்திருக்கிறேன்"! "என் வேதனை மிகுந்த நெஞ்சம் உங்கள் உள்ளத்தில் இப்போதுதான் இரக்கத்தைச் சுரக்கச் செய்ததா"

"நீ என் மகன். பாண்டவர்கள் ஐவருள் மூத்தவன்"

"ஆற்றில் மிதந்த எனக்கு அடைக்கலம் அளித்தவர்களை நான் என்ன செய்வது. சூதனுக்கு இராச்சியமளித்து உணவு மேசையில் கௌரவம் பார்க்காது பக்கத்தில் அமரவைத்து உணவு உண்ண இடமளித்து அழகு பார்க்கும் துரியோதனனை என்ன செய்வது. சுயம்வரத்தில் சூதனுக்கு என்னால் மணமுடிக்க முடியாது என்று ஏசிய திரௌபதி உண்டாக்கிய காயம் அவ்வளவு சீக்கிரத்தில் ஆறிவிடுமா என்ன"?

"வா உனக்கு அங்கீகாரம் அளிக்கிறேன். அஸ்தினாபுரம் உன்னுடையது. வா வந்து மகுடம் சூடிக்கொள்". "நான் உயிர் என்றால் துரியோதனன் ஆன்மா. என்றாவது உயிர் ஆன்மாவுக்கு துரோகம் செய்யுமா அம்மா. எனக்கு தாய்ப் பாசம் என்னவென்று தெரியாது. நான் சூதன் என்பதால் என் மனைவி படுக்கையில் கூட அவள் பக்கத்தில் முப்பது வருடங்களாக இடமளிக்கவில்லை தெரியுமா? இராச்சியத்துக்காக நான் உங்கள் அழைப்பை ஏற்று வருவேனாயின் என்னைவிட ஈனப்பிறவி யாரும் இவ்வுலகில் இருக்க முடியாது. கனவில் கூட என்னால் துரியோதனனுக்கு துரோகம் இழைக்க முடியாது"

"நான் செய்த தவறுக்கு, நான் தானே பிராயச்சித்தம் தேட வேண்டும். நீ அரசனாக அரியணையை அலங்கரிப்பதை நான் காண வேண்டாமா? அஸ்தினாபுரம் உனதல்லவா".

"ஆ! அஸ்தினாபுரம் ராஜமகுடம். துரியோதனனுக்கு துரோகம் செய்துவிட்டு, செய்நன்றி மறந்துவிட்டு இதுநாள் வரை பகைமை பாராட்டியவர்களோடு சிநேகிதம் கொள்வது முடியாத காரியம்"

"எனக்காக இறங்கி வரக் கூடாதா மகனே. உனக்கு சாமரம் வீச உனது ஐந்து சகோதரர்களும் தயாராக இருக்கிறார்கள்"

"துரியோதனனுக்கு என்னால் நம்பிக்கைத் துரோகம் செய்ய முடியாது அம்மா. வேறு ஏதேனும் கேளம்மா. கொடுத்துச் சிவந்த கரங்கள் அதற்காக காத்திருக்கிறது"

"நாளை போர் தொடங்கப் போகிறதல்லவா. நீ எனக்கு இரண்டு வரங்கள் தந்தாக வேண்டும், தருவாயா"?

"அம்மா தூக்கி எறிந்தவனிடம் கையேந்த நேர்கிறதே என வருந்துகிறாயா? மாயக் கவர்ச்சிகளுக்கு ஆட்படாத இரும்பு இதயமம்மா என்னுடையது. உயிர் மட்டும் துரியோதனனுக்கு. வேறு என்ன வேண்டுமானாலும் கேளும் தருகிறேன்"

"எனக்கு வெட்கமாகத்தான் இருக்கிறது. பாண்டவர்களைக் காக்க எனக்கு வேறு வழி தெரியவில்லை கர்ணா! இந்த அன்னையின் கதகதப்பு இன்னும் அவர்களுக்கு தேவைப்படுகிறது கர்ணா. என்னில் ஒருபாதியாக நீ பத்து மாதம் இருந்தாயல்லவா. உனது சகோதரர்களுக்கென்று நீ செய்யப்போவது இது மட்டும் தான் ஞாபகமிருக்கட்டும் கர்ணா"

"கண்ணன் சொல்லிக் கொடுத்தானா வரம் கேட்கச் சொல்லி. பாண்டவர்களுக்காக அந்த வேலையும் பார்க்கின்றானா நீ கேளும் அம்மையே"?

"முதலாவது நீ நாகாஸ்திரத்தை அர்ஜுனன் மீது ஒரு முறை மட்டும் தான் பிரயோகிக்க வேண்டும். இரண்டாவது மற்ற நான்கு சகோதரர்களுக்கும் உன்னால் தீங்கு நேரக் கூடாது"

பத்து மாதம் என்னைச் சுமந்ததற்காக நான் இதைச் செய்கிறேன். என் வீரத்தை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கிறேன். போரில் அவர்கள் வென்ற பிறகு தெரிந்து கொள்ளட்டும் நான் அவர்களின் மூத்த சகோதரன் என்று. எந்த தர்ம கிரந்தமும் நியாயத்தை பார்க்காது. செய்நன்றி தான் மிக முக்கியம். இறக்கும் வரை துரியோதனன் நண்பனாகவே இறப்பேன். கண்ணனிடம் போய்ச் சொல்லுங்கள் இந்த முறையும் அவன் தந்திரமே வெற்றி பெற்றதென்று. நான் போட்ட பிச்சை தான் இராச்சியம் என்று. மரணத்தை விலை விட்டவர்களே வாருங்கள். போரில் வீர மறவனாக உயிர்விடும் பாக்கியத்தை எனக்குத் தாருங்கள். சூதனாக வாழ்ந்து சத்ரியனாக சாவது இவ்வுலகில் நான் ஒருவனாக மட்டும்தான் இருக்கும்.

## பொது அறிவுத்துணுக்குகள்

- கறையான் அரிக்காத மரம், தேக்கு.
- ஏலக்காய்ச்செடி, சுமார் 40 ஆண்டுகள் வரை பலன் தரும்.
- அறிவு வளர்ச்சி அதிகமுள்ள கடல் பிராணி, டொல்பின்.
- 'திரவத்தங்கம்' என்று அழைக்கப்படுவது, பெற்றோல்.
- கண்ணீர்ச் சுரப்பின் பெயர், லாக்ரிமல் கிளாண்ட்ஸ்.
- ரஷ்ய நாட்டு நாணயத்தின் பெயர், ரூபிள்.

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



பிறர் தவறுகளைக் கண்டு தன் தவறுகளைத் திருத்திக் கொள்கிறவன்தான் அறிவாளி.

- ப்ளூடார்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# புதிய அரசியலமைப்புக்கு நடந்தது என்ன?

முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு ஒருமித்து எடுத்த தீர்மானத்தால் முஸ்லிம்களுக்கு எதிராகக் கோசம் போட்ட சிங்களப் பேரினவாதம் அடங்கிப் போயுள்ளது.

தவிர, பதவிகளைத் துறந்த முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பதவிகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையை பௌத்த பீடங்கள் விடுத்த வண்ணமுள்ளன.

இதற்கு மேலாக, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதம் இலங்கையில் உச்சமடைந்தால் அது முஸ்லிம் இனத்துக்குக் கேடாகிவிடும் என்ற உண்மையையும் உணர்ந்து கொண்ட முஸ்லிம் சமூகம் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து தங்களின் எதிர்காலத்தை ஆரோக்கியமாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது.

இவை பற்றி தமிழ் அரசியல்வாதிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

எங்கள் தமிழ் அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஏமாற்று அரசியல் நடத்துவதிலேயே தமது முழுப்பலத்தையும் செலவிடுகின்றனர்.

அரசாங்கத்துக்கான தமது ஆதரவை வழங்கி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை அரங்கேற்றவே அரசுக்கான தங்களின் ஆதரவு தொடர்வதாகக் கூட்டமைப்புக் கூறிவந்தது.

ஆனால் இப்போது அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு என்னவாயிற்று என்றே தெரியவில்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி இலங்கை அரசு எதுவும் பேசுவதில்லை என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது பற்றி மறந்து விட்டது போல நடந்து கொள்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறிய கூட்டமைப்பு; ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றுகிறதா? என்பதைக் கவனிப்பதும் அது தொடர்பான நிலைமைகளை வெளிப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்கையில், இப்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஆதரவுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வை வென்றெடுக்க முடியுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

என்ன செய்வது பிரதமர் ரணிலின் அரசுக்கு ஆதரவு காட்டி வந்த கூட்டமைப்பு இப்போது ஏமாற்றப்பட்டுவிட்டது.

தவிர, தேர்தலும் வருகின்ற நேரமாகி விட்டதால் இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவின் பக்கம் திசை திருப்பி மீண்டுமொரு காலக் கடத்தலுக்கு வழி வகுக்கிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படாவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன் என்று கூறிய கூட்டமைப்பின் முக்கியஸ்தர் இப்போது கூறுவது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுகின்ற துணிவு பிரதமர் ரணிலுக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும் இல்லை என்பதாகும்.

இந்நிலையில்தான் சம்பந்தர் ஐயா இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்தியாவின் பக்கமாகத் திசை திருப்பியுள்ளார்.

# மரகத நடராஜர்



ஸ்ரீ மங்களநாதர் திருக்கோயிலில் "ஆதிசிதம்பரம் சந்நிதி" எனப்படுகின்ற தனி சந்நிதியில் சுமார் ஐந்தரையடி உயரத்துக்கு மரகதத்திலான ஒரு நடராஜர் சிலை உள்ளது. கிட்டத்தட்ட ஒரு சிறு கோயில் போலவே உள்ள இந்தச் சந்நிதிக்கு சிறு முன் மண்டபம், பலிபீடம், கொடிமரம் உள்ளன. நந்தியைத் தொழுது சிறிது உயரத்தில் மரகத நடராஜரைத் தரிசிக்க சிலபடிகள் ஏறவேண்டியுள்ளது. விலைமதிப்பில்லாத பொக்கிஷமாகக் கருதப்படும் மரகத நடராஜர், பாதுகாப்பான கம்பிக் கதவுக்குள் சந்தனக்காப்பு சாற்றப்பட்டு காட்சி தருகிறார்.


சிவாலயாங்களில் நடன சபையில் கல்லில் (அ) உலோகத்தில் வடித்த (அ) மரச்சிற்ப நடராஜர்களைத் தரிசித்திருக்கிறோம். ஆனால் இக்கோயிலில் எங்கும் காணாத அதிசயமாக மரகத நடராஜர் இருப்பது ஆச்சரியமளித்தது.

தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே தெய்வ உருவங்களை மரகதக் கல்லில் வடித்து வைத்து வழிபடும் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது. தாய்லாந்து எமரால்டு புத்தர் நினைவுக்கு வருகிறாரா? இந்தோனேசியாவில் விநாயகர், விஷ்ணு உள்ளிட்ட இந்துக் கடவுளர்களுக்கும் இலங்கையில் புத்தருக்கும் மரகத சிலைகள் உள்ளன. மரகதக்கல்லில் வடிக்கப்படும் தெய்வச் சிலைகளுக்கு தங்களுக்கு முன் நின்று வழிபடும் பக்தர்களின் மனப்பதற்றத்தைக் குறைத்து அமைதியை ஏற்படுத்தும் சக்தி இருக்கிறது என்று நம்பப்படுகிறது.

ஸ்ரீமங்களநாதர் திருக்கோயிலில் உள்ள மரகதநடராஜரை வடித்தவர் இலங்கையைச் சேர்ந்த ஒரு சிற்பிதான் என்கிறார்கள். இராமநாதபுரம் பாண்டிய மன்னர்கள் ஆட்சியின் கீழ் இருந்தபோது சேது சமுத்திரம் கடற்கரையோரம் ஒதுங்கிய மிகப்பெரிய மரகதக்கல் ஒன்று பாண்டிய மன்னனிடம் வந்திருக்கிறது. பாண்டிய மன்னன் அந்தக் கல்லில் நடராஜரை வடிக்க ஆசைப்பட்டிருக்கிறார். ஆனால் இந்திய சிற்பிகள் எவருக்கும் அவ்வளவு பெரிய மரகதக்கல்லில் சிலை வடிக்கத் தெரியவில்லையாம். இதனால் நிபுணத்துவம் பெற்ற இலங்கையைச் சேர்ந்த சிற்பி இரத்தினசபாபதி(எ) இரத்தினேஸ்வரனை அழைத்து இச் சிலையை செய்யச் சொன்னாராம் மன்னர்.

மரகதப் பச்சையில் ஈரப்பதம் அதிகமிருக்கும். சூரிய ஒளிபடும்போது மரகதப் பச்சையிலிருந்து நீர் வெளியேறும். இப்படி நீர் வெளியேறிக் கொண்டேயிருந்தால் பச்சைக்கல்லின் ஆற்றல் குறைந்துவிடும் என்பதாலும் மரகத நடராஜரை எப்போதும் சந்தனக்காப்பு சாற்றி குளிர்ச்சியாகவே வைத்திருக்கிறார்கள். தினசரி பூஜையெல்லாம் மரகத நடராஜருக்கு வலதும் இடதுமாக இருக்கும் ஸ்படிக மற்றும்மரகதலிங்கங்களுக்குத்தான். துவிரம், மேளம், நாதஸ்வர ஓசை அதிர்வுகூட மரகத நடராஜரை பாதிக்கும் என்பதால் பூஜையின்போது மேளம் தட்டுவதோ நாதஸ்வரம் இசைப்பதோ இல்லை.

மார்கழித்திருவாதிரையன்று ஒருநாள் மட்டுமே மரகத நடராஜரின் சந்தனக்காப்பு அகற்றப்பட்டு ஈசனுக்கு அபிஷேகம் செய்யப்படும். பிறகு மீண்டும் சந்தனக்காப்பு அணிவிக்கப்பட்டு நடராஜருக்கு தீபாராதனை நடைபெறுகிறது. ஆருத்ரா தரிசனம் அன்று மட்டும் இலட்சோபலட்சம் மக்கள் இந்த மரகத நடராஜரை தரிசித்து அருள்பெறக் கூடுகிறார்கள்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்பின் அடையாளங்கள் என்ன?

நீ ஒருவரை நேசிக்கும்போது அவர்களிடம் உள்ள குறைகளைக் காண்பதில்லை. அப்படி சில குறைகளைக் கண்டாலும் அவற்றை நியாயப்படுத்தி எல்லோரும்தான் அதைச் செய்கிறார்கள். அது இயல்பு (Normal) என்கிறாய். நீ அவர்களுக்குப் போதுமான அளவு செய்யவில்லை என நினைக்கிறாய். நீ எனனதான செயதாலும இனனுமசெயய வேணடுமென விருமபுகிறாய். அவாகள எபபோதும உன மனதில இருககினறனா.

ஒரு குழநதை அதன பாடடியைப பாாததுச சிரிததுவிடடுகிறது. இதுபோன்ற மிகச்சாதாரணமான விடயங்கள் கூட மெச்சத்தகுந்தவையாகின்றன. அவர்கள் உனக்காக மட்டுமே இருக்க வேண்டுமென விரும்புகிறாய் நீ ஒருவரை நேசிக்கும்போது நீ அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும். அவர்கள் மிகச சிறநதவைகளைப் பெறறிருகக வேணடுமென விருமபுகிறாய். சிறுவிடயங்களுக்குக்கூட உன் மனம் புண்படுகிறது.

ஸ்ரீஸ்ரீ: ஒருவர் அவரிடம் இல்லாத ஒன்றைப் பெற வேண்டும் என்றே நீ ஆசைப்படுகிறாய். சரிதானே?

பதில்: ஆம்.

ஸ்ரீஸ்ரீ: மிகச் சிறந்தவை கிடைக்கட்டும் என்பது என் விருப்பம் என நீ ஆசி வழங்கும் போது நீ அவர்கள் மிகச் சிறந்தவைகளைக் கொண்டவரில்லை எனக் குறிப்பால் உணர்த்துகிறாய். இப்போது நான் சொல்கிறேன் இப்போது (Present) தான மிகச சிறநதது. இதை நீ உணாநதால நாளை எனபது இன்றைவிடச் சாதாரணமாகத் தானிருக்க முடியும்.

# தாக்குதல்தாரி வீட்டிலிருந்து அரபு பாடசாலைக்கான விண்ணப்பங்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட தற்கொலைதாரியின் வீட்டிலிருந்து அரபுமொழி பாடசாலை தொடர்பான விண்ணப்பங்களை குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றியதாக தெரிவித்தனர்.

உயிர்த்த ஞாயிறு அன்று கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் அஸாம் மொஹமட் முபாரஹ் அலியாஸ் அப்துல்லாஹ் என்பவனால் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், குறித்த குண்டுதாரியின் கொலன்னாவை வீட்டிலிருந்து சில முக்கியமான ஆவணங்களை மீட்டுள்ளதாக குற்றத்தடுப்பு பிரிவினர கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிபதியிடம் தெரிவித்தனர்.

இதன்படி மேற்படி வீட்டில் மீட்கப்பட்ட ஆவணங்களில் ஒன்று இலங்கையில் ஒரு புதிய அரபு மொழி பாடசாலையை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பப்படிவமாகும். அந்த விண்ணப்பத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய இல்ஹாம் மொஹமட் ஸாஜித் என்பவனின் கையொப்பம் இடப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

"மகனறிவு தந்தையறிவு" என்பது நாலடியார். ஒருவனுக்கு அறிவு, உணர்வு இவைகள் தந்தையின் கூறுகளாம். உடம்பு முதலியவை தாயின் கூறுகளாம். உடம்பைப் பெற்றவள்தாய். உணர்வைப் பெற்றவன் தந்தை. தாய் மறு மாதத்தில் இருந்தால் மக்கள் தந்தையின் மதக் கோட்பாட்டைப் பின்பற்றி நடப்பதுதான் முறை. பராசரருக்குப் பரிமளகந்தியிடம் தோன்றிய வியாச முனிவர் தாய்வழி சேராது தந்தை வழி சேர்ந்தார் என்பதை அறிக. உடம்பைப் பெற்றுக்கொடுத்த தாய்க்கு அந்த வகையில் மட்டும் நன்றி செலுத்தி விட்டு தந்தை வழி நின்று வழிபாடு முதலியவைகளைப் புரிவதுவே கடமையும் அறிவுடைமையும் ஆகும். (முற்றும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தெந்த சாபங்களினால் என்னென்ன பாவங்கள் ஏற்படும்?

**பிரேத சாபம்**

இறந்த மனிதனின் உடலை வைத்துக்கொண்டு அவரை இழிவாகப பேசுவதும, அவருடைய உடலைத தாண்டுவதும, பிணதநின இறுதி காரியஙகளை செய்யவிடாமல் தடுப்பதும், இறந்தவரை வேண்டியவர்கள் பார்க்க அனுமதி மறுப்பதும் பிரேத சாபத்தை ஏற்படுத்தும். இதனால் ஆயுள் குறையும் என்கிறார்கள்.

**பிரம்ம சாபம்**

நமக்கு வித்தை கற்றுக்கொடுத்த குருவை மறப்பது, வித்தையை தவறாக பயன்படுத்துவது, மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்காமல் மறைப்பது இதனால் பிரம்ம சாபம் ஏற்படுகிறது. பிரம்ம சாபத்தால் படிப்பு இல்லாமல் போகும் என்கிறார்கள். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில நாவற்குழி கேரதீவு வீதி, தச்சன்தோப்பு, கோகிலாகண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி, நாவற்குழி, கைதடி யுனைரட் மோட்டர்ஸ், வடமாகாணசபை கைதடி, கைதடி கோப்பாய் வீதி, கைதடி வடக்கு, கைதடி நவபுரம், மட்டுவில், குருநகர், ஐஸ் தொழிற்சாலை, Ceynor, Nefad வலைத் தொழிற்சாலை, கடற்கரை வீதி, சுன்னாகம் ஒருபகுதி, சுன்னாகம் கார்கில்ஷ் புட் சிற்றி. சுன்னாகம் மக்கள் வங்கி, கொத்தியாலத்தை, கந்தையா உபாத்தியார் வீதி, ஜெட்மோட்டர்ஸ், கல்லாரை, மல்லாகம், ஏழாலை ஒரு பகுதி, மல்லாகம் நீதிமன்றம், அலுக்கை, அளவெட்டி, பன்னாலை, துர்க்காபுரம், தெல்லிப்பளை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் வற்றாப்பளை, கேப்பாபிலவு, நந்திக்கடல், விமானப்படை-I மற்றும் II, 59வது படைப்பிரிவு (14ESR- 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப்பளை, 14 ESR, 12 VIR, 16 ESR, FMA, SLASC, 11 ESR ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பெரியபண்டிவிரிச்சான், சின்னப் பண்டிவிரிச்சான், மடுத் தேவாலய வெளிப்பிரதேசம், மடு நீர்ப்பாசன சபை, கள்ளியடி, இலுப்பைக்கடவை, அந்தோனிபுரம், தேத்தாவடி, பாலம்பிட்டி, தட்சணா மருதமடு, பெரியமடு, ஈச்சலவக்கை, சன்னர், சன்னர் இராணுவமுகாம், பள்ளமடு, விடத்தல்தீவு கிராமம், கோவில் குளம், அகதியாமோட்டை, கூறை, சேதுவிநாயகன் குளம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணம் ஜொலிஸ்ரார் அணி வெற்றி




விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணத்திற்காக ஞானம்ஸ் பெயிண்ட் நிறுவனத்தால் புற்தரையில் நடத்தும் மட்டுப்படத்தப்பட்ட இருபது-20 ஓவர்களைக் கொண்ட தொடரில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற 3 ஆவது போட்டியில் ஜொலிஸ்ரார் அணி யாழ். சென்றல் அணியை 7 இலக்குகளால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றனர்.

பாலேந்திரா-17, றஜீவ்குமார்-15, மதூஸன்-26, நிரோஸன்-17 ஓட்டங்களைப் பெற்றனர். தோபன், கோபிராம் தலா-02 இலக்குகளையும், வாமணன், லக்சுமி, சந்தோஸ், ருக்ஸ்மன் தலா-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 17.2 ஓவரில் 3 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றனர்.

சந்தோஸ்-19, வாமணன்-13, அருண்குமார் ஆட்டமிழக்காது -33, ஜனார்த்தனன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். சுபாதீஸ்-03, மதூஸன்-01 இலக்கினை கைப்பற்றினர். (கு)

# விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணம் சென்றலைட்ஸ் அணி வெற்றி




யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 8 அணிகளுக்கிடையில் விஜயரட்ணம் ஞாபகார்த்த இருபது-20 சுற்றுப் போட்டியானது ஞானம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

8 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில், அணிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெறுகின்றது. ஏபி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற ஏபி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி, முதல் 3 விக்கெட்டுகளையும் 19 ஓட்டங்களுக்குள் இழந்தது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஜெனோசன்-டர்வின் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டனர். டர்வின் 23 ஓட்டங் களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பிறகு நிரோஜன், வந்த வேகத்திலிருந்து அதிரடியாக ஆடினார். மறுமுனையில் ஜெனோசன் ஒத்துழைப்பு வழங்க, நிரோசன் 17 பந்துகளில் அரைச்சதம் கடந்து, அடுத்த பந்தில் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜெனோசன் 40 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். 20 ஓவர்கள் நிறைவில் சென்றலைட்ஸ் அணி, 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 141 ஓட்டங்களை எடுத்தது.

பந்து வீச்சில் ஏபி அணி சார்பாக, சிலோஜன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், லிங்கநாதன், இராகுலன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய ஏபி அணி, முதல் நான்கு விக்கெட்டுகளையும் 22 ஓட்டங்களுக்குள் இழந்தது. 5 ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த ஆதித்தன்-உத்தமக்குமரன் ஜோடி அணியை மீட்டுக் கொண்டு சென்றனர். எனினும், உத்தமக்குமரன் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆதித்தன் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதி நேரத்தில் சிலோஜன் 29, பார்த்தீபன் 18, போராடிய போதும் அவர்களால் அணியை வெற்றிக்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, ஏபி அணி 12 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, மயூரன், சாள்ஸ் மற்றும் ஜெரிக்துசாந்த் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். (க-26)




## தூயஒளி அரையிறுதியில்




தூய ஒளி வெற்றிக் கிண்ணம் 2019 போட்டிகள் தற்போது அரையிறுதியை எட்டியுள்ளது. யாழில் பலம்வாய்ந்த அணியான ஞானமுருகன் VS சென்.மேரிஸ், பாடும்மீன் VS ஊரெழு றோயல் ஆகிய அணிகள் அரையிறுதியில் மோதவுள்ளன. (க-106)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அரையிறுதிக்குள் நுழைந்தது பாடும்மீன்

யாழ்ப்பாணம், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண கால் பந்தாட்ட லீக்கின் அனு சரணையில், மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 மீனவர்களின் நினைவாக வருடாந்தம் நடத்தும் தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான இவ்வருடத்துக்கான போட்டிகள் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

16 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் இடம்பெறுகின்றன.

சுற்றுப்போட்டியின் நான்காவது காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி நடைபெற்றது. இதில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் அணி மோதியது. இதில் பாடும்மீன் அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு நுழைந்தது. (க-26)

# பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்தாட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்






வடமாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில், பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் பெரு விளையாட்டுப் போட்டிகளில், 20 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 6 ஓவர்கள் 11 பேர் கொண்ட மென்பந்தாட்ட துடுப்பாட்ட போட்டிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 6 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்தது. பதிலளித்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 6 ஓவர்களில் 40 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது. மானிப்பாய் இந்துவின் யதுநசன் தொடர்நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (க-26)

## பயங்கரவாத...

மூலம் வகுக்கப்படும் என சபாநாயகர் இதன் போது தெரிவித்துள்ளமை முக்கிய விடய மாகும்.

அத்தோடு சபாநாயகருடனான இச்சந்திப் பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன உட்பட தெரிவுக்குழுவின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அரசியலமைப்பை..

அந்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள தாவது, "19ஆவது திருத்தத்தின்படி உங்க ளுக்கு இருக்கும் அதிகாரத்தின் பிரகாரம் அமைச்சர்களை நியமிக்க முடியாது.

19வது திருத்தச் சட்டத்தின்படி, அமைச் சர் ஒருவர் பதவி விலகினால் அந்த இடத் துக்கு மற்றொருவரின் நியமனம் பிரதமரின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இடம் பெற வேண்டும். ஆனால், இதனை மீறி பதில் அமைச்சர்களை நீங்கள் நியமித்திருப் பது தவறானது.

அரசியலமைப்பை மீறிய உங்களின் நடவடிக்கை குறித்து பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்படலாம்" என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெற்றிடமாக இருந்த அப்பதவிகளை நிரப்புவதற்காக, ராஜித சேனாரத்ன, மலிக் சமரவிக்ரம, ரஞ்சித் மதும பண்டார ஆகியோரின் பெயர்களை ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரைத்துள்ளது. எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன குறித்த வேட்பாளர்களின் பட்டியலை நிராகரித்து வேறு உறுப்பினர்களை நியமித் துள்ளார்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற ஆட்சி கவிழ்ப்பு நடவடிக்கையின் போதும் அரசியலமைப்பை மீறி பாராளு மன்றத்தை கலைத்திருந்தார்.

இந்நிலையில், தற்போது குறித்த நிய மனங்களையும் அவர் அரசியலமைப்பை மீறி வழங்கியுள்ளார் என பிரதமர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பொறுப்புக்கூற...

அவர் இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் திறனை வலுப்படுத்து வதற்கும் அமெரிக்கா உதவுகின்றது என வும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பயங்கரவாதத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து இலங் கைக்கு எவ்வாறு உதவலாம் என்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சிறுபான்மையினத்தவர்கள், புகலிடக் கோரிக்கையாளர்கள் அகதிகள் உட்பட அனைவரினதும் மனித உரிமை களிற்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தேசிய தேர்தல்களிற்குள் நுழையும் இந்த தருணத்தில் இலங்கையை நல்லிணக்கம், நீதி பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் முன்னேற்றத்தை காண்பிக்கு மாறு அமெரிக்கா தொடர்ந்தும் வற்புறுத்தும் என அலைஸ் ஜி வெல்ஸ் தெரிவித்துள்ளார்.(ம-3)

## யாழ்.குடாவில்...

களில் நேற்றிரவு 8.30 மணிக்கு லேசான தூறலாக தொடங்கிய மழை, பின்னர் காற்று மற்றும் இடியுடன் ஓரளவு மழைப் பொழிவு காணப்பட்டது.

நாட்டின் தென்பகுதியில் மழையுடனான காலநிலை தொடர்கின்ற நிலையில் யாழ்ப் பாணத்தில் வெப்பத்துடன், காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணக் குடா நாட்டில் பரவலாக இடி மற்றும் காற்றுட னான மழை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (ம-3)

## வருடம் தோறும்...

கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மின் சாரத்தை பயன்படுத்துபவர்களின் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பு - ஜனநாயக இடதுசாரிகள் முன்னணி காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அச் சங்கத்தின் இணைப்பாளர் சஞ்சீவ தம்மிக்க மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை மின்சார சபை தற்போது ஒரு மின்சார அலகுக்கு வழங்கப்பட்ட செலவு 18 ரூபாயிலிருந்து 23 ரூபாய் வரை அதிகரித் துள்ளது.

மின்சார செலவு மற்றும் மின்சார கொள் வனவுச் செலவு ஆகியன அதிகரிப்ப தற்கான பிரதான காரணம் அவசர கால நிலையில் மேற்கொள்ளப்படும் மின்சார கொள்வனவு களில் ஏற்பட்ட ஊழல்கள் மற்றும் மோசடிகள் ஆகும்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடியை விடவும் இது பாரிய மோசடியாகும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

## முஸ்லிம்களின்...

சூரிய அறிவித்துள்ளார்.

இலங்கையில் ஒவ்வொருவரும் முதலில் தங்களை இலங்கையர் என்றே அடை யாளப்படுத்த வேண்டும். அவ்வாறு எவரா வது சிந்திக்கவில்லை என்றால், அவர்கள் தீர்வின் ஒரு அங்கமல்ல, மாறாக பிரச்சி னையின் ஒரு அங்கமே என்றும் அவர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அரசியல் ஐக்கியத்தின் மூலமாகவே பாதுகாப்பு, பொருளாதாரம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற சவால்களை வெற்றிகொள்ள முடியும். நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் ஒன்றுக்கு மற்றது உதவியாக இருந்து செயற்பட வேண்டியதே தற்போதைய தருணத்தில் அவசியத் தேவையாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## பிரதானியாக...

தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானி யாக மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானி யாக இருந்த சிசிர மெண்டிஸ் அண்மையில் பதவி விலக்கப்பட்டதையடுத்து, அந்த பதவி க்கு மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க நிய மிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## முல்லை விளாங்...

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் மாங்குளம் வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கிளி நொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலி ஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்செய்தி அச்சுக்கு போகும் வரைக்கும் துப்பாக்கிச் சூடு தொடர்பான முழுமையான விபரம் தெரியவரவில்லை. (ம-3)

## முஸ்லிம் மருத்து..

இயங்கி வரும் அவரது மருத்துவ சிகிச்சை நிலையத்தில் வைத்தே கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது மருத்துவ நிலையத்தில் பணியாற்றிய தாதியப் பணியாளர் ஒருவர் தலவாக்கலை - லிந்துலை நகர சபையின் தலைவருக்கு அறிவித்துள்ளார். அதுதொடர் பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை யடுத்து மருத்துவர் விசாரணைக்குட்படுத் தப்பட்டார்.

அதன்போது அவரது எம்.பி.பி.எஸ். மருத்துவத் தகைமையை உறுதிப்படுத்த அவர் தவறியதால் மேலதிக விசாரணைக் காக கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட் டுள்ளார். அத்துடன் சந்தேகநபரால் கடந்த ஒரு வருடமாக நடத்தப்பட்டு வந்த மருத்துவ சிகிச்சை நிலையத்திலிருந்து சந்தேகத்துக்கு இடமான மருந்துகள் மற்றும் ஊசிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரான மருத்துவர் விசாரணை களின் பின்னர் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படுவார் என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித் தனர். (ம-3)

## வடக்கு கிழக்கு...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யும் பாராளு மன்ற தெரிவுக்குழு நேற்று மாலை மீண்டும் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளது.

அதன்படி கிழக்கு மாகாணத்தின் முன் னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் சாட்சியம் வழங்கினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கை யில்,"உலக நாடுகளில் பெரும்பான்மை இனமாக முஸ்லிம்கள் இருப்பதையே நான் கூறினேன். தாக்குதல் குறித்த அச்சத்திலி ருந்த முஸ்லிம்களை உற்சாகப்படுத்துவதற் காகவே அந்த கருத்தை கூறியிருந்தேன்.

2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் சஹ்ரான் என்னை தோற்கடித் தார். அனைத்து அரசியல் தலைவர்களை போல நான் சஹ்ரானை சந்தித்திருக் கிறேன். 2015 காலப்பகுதியில் சஹ்ரானுக் கும் இராணுவத்தினருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் தொடர்பு இருந்தது.

2017 வரை மதத் தலைவராக இருந்த சஹ்ரான் காசீம் இதன் பின்னர் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். அல்லது சில குழுவுடன் தொடர்பு கொண்டதாகத் தெரிகிறது. மத போதனைகளில் ஈடுபட்டு பல இளைஞர் களை கவர்ந்திருந்த சஹ்ரான் பின்னர் பலரையும் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்தார்.

தொடர்ந்தும் இஸ்லாம் குறித்து மாறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்த சஹ்ரான், பொதுமக்களிடத்தில் தீவிரவாதத்தை பிரசங் கிக்க ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு பொலிஸாரே அனுமதி கொடுத்திருந்தார்கள்.

2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் காத்தான் குடியில் சஹ்ரானோ அல்லது அவர்களது நண்பர்களோ இருக்கவில்லை. அவர்கள் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார் களா என்பதும் எனக்கு தெரியாது.

வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டால், முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்துவதன் ஊடாக இரத்த ஆறு ஓடும் என நான் கூறியது உண்மைதான். கிழக்கு இணைக்கப் படுவதை முஸ்லிம் மக்கள் விரும்பவில்லை. முஸ்லிம் மக்கள்தான் ஆயுதம் ஏந்துவார்கள் என்று கூறினேன்.

மேலும் காத்தான்குடியில் அரபு மொழி களில் பெயர்ப்பலகைகள் இருப்பது அரபு நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணி களை கவர்ந்துகொள்ளவே. ஆனால் அரபு மொழி பெயர்ப்பலகைகள் இடக் கூடாது என்று சட்டம் இல்லை" என்றும் கூறினார். (ம-3)

# யாழுக்கு வந்தார்
## அத்துரலிய ரத்ன தேரர்
## காலில் விழுந்து அமோக வரவேற்பு



சர்ச்சைக்குரிய எம்.பி அத்துரலிய ரத்ன தேரர் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

இன்று யாழில் நடக்கும் இரண்டு நிகழ்வுகளில் கலந்து கொள்கிறார். காலை 11 மணிக்கு நாகவிகாரையில் நடைபெறும் பொசன் தின நிகழ்வில் கலந்து கொள்கிறார்.

பின்னர் சர்வமத கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இலங்கை வேந்தன் கல்லூரி யில் நடக்கும் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வார்.

தொண்டர் ஆசிரியர்கள் தேரரை சந் தித்து, தமது நிரந்தர நியமனம் குறித்து அக் கறை செலுத்தும்படி கோரிக்கை விடுத்தனர். அவர்கள் தேரரின் காலில் விழுந்து வண ங்கி வரவேற்பு செலுத்தியிருந்தனர். (ம-3)


## புலோலி ப.நோ.கூ.சங்கம்
## புலோலி கிழக்கு, பருத்தித்துறை

### பதவி வெற்றிடம்
### எரிபொருள் நிலைய முகாமையாளர் (ஒப்பந்தம்)

எமது சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் வெளிவாரியாக விண்ணப்பம் கோரப்படுகின்றது

1. பதவி : எரிபொருள் நிலைய முகாமையாளர்
2. வேதனம் : இயக்குனர் சபைத் தீர்மானத்திற்கமைவாக
3. வயதெல்லை : 18 வயது தொடக்கம் 45 வயது வரை
4. தகைமைகள் : கூட்டுறவு பணியாளராக கடமையாற்றியவர்கள், க.பொ.த (சா/த) மொழி, கணிதம், உட்பட 6 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவுப் பணியாளர் தராதர பத்திரம் (சா/த) நிறைவு செய்தவர்களும் ஏனையோர் க.பொ.த (சா/த) இல் கணிதம், மொழியில் திறமை சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் பெற்றவராக இருத்தல்.
5. பிணை (காசு) செலுத்தப்படல் வேண்டும்.
6. பிறப்புச் சான்றிதழ், கல்வி தகைமைச் சான்றிதழ், தொழில் தகைமைச் சான்றிதழ் என்பவற்றின் பிரதியுடன் 21.06.2019ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

★முக்கிய விடயம் : ஓய்வு நிலை பிற சங்கப் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம்

தலைவர்
புலோலி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (C-6681)



கொவிசெத
திகதி 2019.06.13
சீட்டிழுப்பு இலக்கம் 2147
A 20 40 46 61

நீரோகா
திகதி 13/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0558
லக்கினம் / வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 02 07 10 35

மஹஜன சம்பத
திகதி 2019/06/13
சீட்டிழுப்பு இலக்கம் 3937
J 7 8 6 0 0 0

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1547
திகதி 2019/06/13
C 19 27 40 72

## மோட்டார் சைக்...

ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம் பகுதியை சேர்ந்த 24 வயதான இளைஞரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விமானப் படையின் ஜீப் வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் அனுமதித்த பின்பு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் ஜீப் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)


வீடு விற்பனைக்கு

வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகலவசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 312 4650 (9144)



குவைத் வேலைவாய்ப்பு

முன்பள்ளி ஆசிரியர் உதவியாளர் (பெண்கள்)

சம்பளம் ரூ.87,500/-

எமரல்ட் ஐல் License No. 2268

0777 324 004
077 00 38 215
0212219 221

221-1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk



வீடு விற்பனைக்கு

பிரம்படி லேன், கொக்குவிலில் 2 பரப்பு காணியில் அமைந்துள்ள புதிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

076 702 3565 (9146)


மீண்டும் ஐக்கியத்துடன் நாடு தலைநிமிரும் என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

17 இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்களுடன் இடம்பெற்ற விஷேட சந்திப்பின் போது சபாநாயகர் இதனை தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பு பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், பாராளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட தெரிவுக்குழு மற்றும் அமைச்சுக்களை இணைத்து பயங்கரவாதம் மற்றும் அதனை ஊக்குவிக்கும் அடிப்படைவாதத்தை ஒழிப்பதற்கு தெளிவான சட்டதிட்டங்களை தயாரித்து வருவதாகவும் சபாநாயகர் இதன்போது தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டுக்குள் ஒரு சட்டத்தின் கீழ் இலங்கையர் என்ற ரீதியில் வாழ்வதற்கான அடிப்படை இதன

23

## பயங்...

யாக முடிவுக்கு கொண்டு வந்து பாதுகாப்பு உறுதி செய்யப்பட் டுள்ளது.

இலங்கையில் அனைத்து அடிப்படைவாதிகளையும் புறம்தள்ளி


பதவிக்கான தேடல்

சர்வதேச ரீதியில் இயங்கிவரும் Holdings Lanka நிறுவனத்துக்கான புதிய கிளைகள் ஆரம்பமாகவுள்ளன. மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு இவ்விடங்களில் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாகவுள்ளனர்.

- O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
- O/L இல்லாதவர்களுக்கான விசேட பதவி வாய்ப்புக்களும் உள்ளன.

தொடர்புகளுக்கு:- 077 408 3273 (9083)



விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg

DELIVERY IN 3-5 DAYS (C-6532)

மானிப்பாய் 0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELS



வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!

மிகக்குறைந்த கட்டணத்தில்

UK - 350/=
France, Germany, Italy, Denmark 500/=

திருமுருகன் கொம்நெற்

321, K.K.S.Road, Jaffna. (C-6656) 0777 554 528



யாழ்.மாவட்ட சவாரிச் சங்க

# பொதுக்கூட்டம்

காலம் : 15.06.2019 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.00 மணி
இடம் : புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா பொது நோக்கு மண்டபம் (அம்மன் கோவில் முன்பாக)

இக்கூட்டத்திற்கு அங்கத்தவர்கள், சவாரிப் பிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு:
(C-6684) யாழ்.மாவட்ட சவாரிச் சங்க நிர்வாகம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623 (9098)



கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்


வீட்டு கையியக்க மெசின்


வர்த்தக கையியக்க மெசின்


வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின் (8716)

தொடர்புகளுக்கு : 076 796 6000, 077 968 1118 (இலங்கை)
இல் 4164336006
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
இலக்கத்துக்கு Missed Call செய்யவும். (ஏஜாக்ஸ், கனடா)



விசேட கருத்தரங்கு

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர், பதிவாளர், SLEAS, SLAS ஆசிரியர் போட்டிப் பரீட்சை புள்ளி விபர அலுவலர்

சனி 15/06/2019
9 AM - 2 PM

By P கமல்தாசன் மற்றும் வளவாளர்கள்

PN- சுதர்சன் SLEAS
K- குமணன் SLPS
AK- கீர்த்திராஜன் MA

நாவலர் கல்வி நிறுவனம்

077116739, 0761661986



சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.

UK - 525.00, Germany - 675.00, France - 830.00

நிபந்தனைகள் எதுவும் இல்லை

அருள்

இல.1, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

076 443 1576 (C-6656)



31ம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



விகாரி வருஷம் தமிழ் வைகாசி 01ம் நாள் புதன்கிழமை இரவு அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் நாகலிங்கம் சச்சிதானந்தன் (ராகுலசூரியன்ஸ்)

(முன்னாள் விலாசினி ரெக்சயில்ஸ் No.148, கெய்சர் வீதி, கொழும்பு - 11, பின்பு ராகுலசூரியன்ஸ் புடவை மாளிகை No.122, பிரதான வீதி, பருத்தித்துறை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று வைகாசி 31ம் நாள் வெள்ளிக்கிழமை (14.06.2019) காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ராகுலசூரியன்ஸ்
சந்திரசபா, தம்பசெட்டி வீதி,
பருத்தித்துறை.

இல்லறம்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
0212260263, 0773903596

(C-6673)



போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் திறந்த பரீட்சைக்கு

பிரிவு I
பிரதி சனி 9.00-1.30
பிரிவு II
பிரதி ஞாயிறு 9 - 1.30
பிரிவு III
செவ், வியா
பி.ப 4.00 - 6.30
புதிய பிரிவு IV
சனி, ஞாயிறு பி.ப
4.30 - 6.30

முகாமைத்துவ உதவியாளர் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
பிரதி ஞாயிறு
9.00 - 2.00

சட்டமானி நுழைவு
சனி, ஞாயிறு
9.00 - 3.00

பதிவாளர், ஆசிரியர்கள் மற்றும் புள்ளி விபரவியலாளர்
பிரதி சனி 9.00 - 3.00

SLAS, SLEAS
பிரதி ஞாயிறு
9.00 - 4.00 (C-6685)

076 688 3394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)



பொருளியல் கருத்தரங்கு

க.பொ.த. உயர்தரம் - 2019

ஆரம்பம்:
15.06.2019 சனிக்கிழமை 2.00 PM

Resource Person
S.JEYAKUMAR
{B.A (Hons) Econ Spl, MA. in Econ (Pera) PGDE}

- தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- கற்றல் கையேடுகள் வழங்கப்படும்.
- புள்ளித் திட்டத்துடன் கூடிய விளக்கம்
- வெளி மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்
- ஆசிரியரிடம் கற்கும் மாணவர்கள் தமது அனுமதி அட்டையை எடுத்து வரவும்.

இடம்: Science Hall Jaffna.
(பெருமாள் கோவில் அருகில்)

முற்பதிவுகளை DCM - Jaffna, NEC - Jaffna ஆகிய இடங்களில் பதிவு செய்ய முடியும்.

தொடர்புகளுக்கு: 077 723 8597 (9122)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.